# ஜீவனின் உண்மையான தர்மம்



**பரலோகத்திலிருக்கும் பிதா யார்?**

**ஸ்ரீ கௌரங்கா ராதா மதன் மோகன் ஆலயம்**
(கொட்டாரம், கன்னியாகுமரி)

இரண்டாம் பதிப்பு
Sept 14, 2022
*Version 2.0*

**ஒரே இறைவன்!**
**ஜாதியில்லை, நிறமில்லை, மதமில்லை.**

ஒரே மந்திரம்
**ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண**
**கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே**
**ஹரே ராம ஹரே ராம**
**ராம ராம ஹரே ஹரே**

இந்தப் புத்தகத்தை தமிழில் வெளியிட பல பக்தர்களும் பக்தைகளும் மிகவும் துணை செய்துள்ளனர். அவர்களுடைய உதவியே இந்நூல் சிறப்புடன் வெளிவர முக்கியக் காரணமாகும். அவர்களுக்கு எங்கள் அன்பான நன்றி.

ஆசிரியர்
Disciple of Yuga Acharya Srila Narayana Goswami Maharaja
டாக்டர் பகவதி காந்த தாஸா Ph. D

சரிபார்த்தல்:
ஸ்ரீமதி ராதிகா தேவி தாஸி
ஸ்ரீமதி கிருஷ்ண பிரியா தாஸி

அச்சிடல்:
டாக்டர் அஜய் கிருஷ்ண தாஸா Ph. D

**வெளியீடு:** கோகுல் பவன்
Opp: மாருதி ஸ்டோர்ஸ்
கொட்டாரம் - 629703,
கன்னியாகுமரி , தமிழ் நாடு, இந்தியா

**தொடர்பு:** bkdasa@gmail.com

gokulbhajan.com
gokulbhavan.com
youtube.com/c/bkdasa
purebhakti.com

Phone: +91 750 222 2794
+91 960 066 8797
+91 959 796 9492
+1 919 491 9536 (USA)

# பொருளடக்கம்

1. பரம இறைவன் யார்?..........................................6
1.1. எத்தனையோ மதங்கள்....................................6
1.2. பரம இறைவனை அறிவது சுலபமல்ல..................7
1.3. ஏராளமான தெய்வங்கள்..................................8
1.4. தெய்வங்களை யார் வழிபடுவார்கள்?....................8
1.5. பரம இறைவன் ஒருவரே..................................9
1.6. பரம இறைவன் யார்?......................................9

2. பரம இறைவனின் நாம மகிமை..............................11
2.1. மூன்று விதமான நாமங்கள்..............................11
2.1.1. கௌன (சாதாரண) நாமங்கள்..................11
2.1.2. முக்கிய நாமங்கள்..................................12
2.1.3. உத்தம (பிரேம) நாமங்கள்........................12
2.3. ஹரி நாமம் பிரேம பக்தியை கொடுக்கும்...........14
2.4. ஹரி நாமம் பில்லி சூன்யத்தை அழிக்கும்...........14
2.5. ஹரி நாமம் பேய் பிசாசுகளை துரத்தும்.............14
2.6. ஹரி நாம ஜெபமே கலியுக தர்மம்....................15

3. ஜீவ தத்துவம்...................................................16
3.1 ஜீவன்களின் பிறப்பிடம்....................................16
3.2 ஜீவன்கள் எப்போது பிறந்தன?..........................17
3.3 ஜீவன்களின் நித்ய குணங்கள்...........................17
3.4 ஜீவன்களுக்கு ஜாதி கிடையாது.........................18

4. வழிபாட்டு முறைகளும் பயன்களும்.........................21
4.1. பேய் பூதங்களை வணங்குபவர்கள்...................21
4.2. மூதாதையர்களை வணங்குபவர்கள்..................21
4.3. தெய்வங்களை வணங்குபவர்கள்.......................22
4.4. சொர்க்கம் நிரந்தரமானதல்ல.........................23
4.5. பரம இறைவனை வணங்குபவர்கள்..................23

4.6. கிருஷ்ண வழிபாடும் அனைத்து தேவர்களும்.......24
4.7. ஸ்ரீகிருஷ்ணரும் விஷ்ணுவும் நாராயணரும்.........25
4.8. கிருஷ்ண பக்தி மட்டுமே மிகவும் உயர்ந்தது........26

*5.* கிருஷ்ண பக்தியின் 4 தூண்கள்............................28
*5.*1. புலால் உண்ணாமை.......................................28
*5.*2. மது அருந்தாமை..........................................29
*5.*3. சூது ஆடாமை...............................................29
*5.*4. திருமணமற்ற தொடர்பு கொள்ளாமை...............30

6. ஏன் இத்தனை மதங்கள்?...................................31
6.1. மூன்று குணங்கள்.........................................31
*6.2.* மதங்களின் வகைகள்....................................32
*6.4.* விக்கிரக வழிபாட்டின் உண்மைகள்..................34
6.*5.* ஏமாற்று மதங்கள்.........................................35

7. சுத்த உணவின் முக்கியத்துவம்..............................37
*7.1.* நீ சாப்பிடுவதே நீ..........................................37
*7.2.* பூண்டு வெங்காயம் தாமச உணவுகள்................39
7.3. கொல்லாமை...............................................40
*7.4.* ஆன்மீக உணவு விதி முறைகள்.......................42

*8.* மாயாவாதம் அபாயம்.........................................43
*8.1.* மாயாவாதம் அசத் சாஸ்திரம்..........................43
*8.2.* பிரம்மத்தைப் பற்றியுள்ள உண்மை என்ன?.........44

*9.* கர்மம், ஞானம், அஷ்டாங்க யோகம்.......................46
9.1. எந்த யோகம் சிறந்தது?.................................46
9.2. அஷ்ட சித்தியால் ஏமாற்றப் படுதல்...................47
9.3. அஷ்டசித்தி நாய்க்கு போடும் எலும்புத் துண்டு போன்றது...................................................47
9.4. மாயையால் பொதிந்ததே அஷ்ட சக்திகள்..........47
9.5. இவனது நிலை என்ன?..................................48
9.6. சித்தர்களை வணங்காதீர்கள்.........................48

10. பஞ்ச உபாசனம்....................................................50
*10.1.* பஞ்ச உபாசனத்தின் நோக்கம்.........................50
*10.2.* பஞ்ச உபாசனம் கிருஷ்ண பக்தி அல்ல............51
10.*3.* தற்போதைய விநாயக வழிபாட்டைப் பற்றி.......52

*11.* ஜீவ தர்மம் மதமற்றது..........................................55
11.1. ஜீவ தர்மம் எல்லா மதங்களுக்கும் அப்பால்.......55
11.*2.* நம் ஜீவ தர்மம் என்ன?..................................56
11.*3.* கிருஷ்ண பக்தியே ஜீவ தர்மம்........................56
11.4. கிருஷ்ண பக்தனுக்கு யமன் கூட வணக்கம்......56
*11.5.* அரிய வாழ்க்கையை வீணாக்காதீர்..................57

# 1. பரம இறைவன் யார்?

## *1.1.* எத்தனையோ மதங்கள்

நாம் வாழும் இந்த உலகத்தில் சுமார் 200 க்கும் மேலான மதங்கள் இருந்தாலும் பரம இறைவன் ஒருவனே. ஆனால் ஒவ்வொரு மதமும் அந்தப் பரம்பொருளைப் பற்பல விதங்களாக பற்பல பெயர்களில் வழிபடுகின்றன. பைபிளில் இறைவனுக்கு 17 பெயர்கள் இருப்பதாகவும், குரானில் இறைவனுக்கு 99 பெயர்கள் இருப்பதாகவும் நாம் காண்கிறோம். யூதர்கள் இறைவனுக்கு 7 பெயர்கள் உள்ளதாகக் கூறுகின்றனர். இப்படி ஒவ்வொரு மதமும் வேறு வேறு பெயர்களைக் கூறுகின்றன.

அத்வைத மாயாவாதிகளோ தாங்களே கடவுள் என்று கூறுகின்றனர். பிரம்மத்திலிருந்தே பகவானும் தோன்றுவதாக கூடக் கூறுகின்றனர். ஆனால் சூரியன் போன்ற பரம இறைவனிலிருந்து கிளம்பும் தேஜஸ் ஒளியே (அங்க காந்தி) அந்த பிரம்ம ஜோதி என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. சூரிய வெளிச்சத்திலிருந்து எப்படி சூரியன் தோன்ற முடியும்?

சுருக்கமாகக் கூறினால், இந்த உலகத்தில் அனைவருமே கலியுகத்தின் உக்கிரத்தால் குழம்பிப் போயிருக்கின்றனர். மேலும் இந்துக் கடவுள், கிறிஸ்தவக் கடவுள், முகமதியக் கடவுள், யூதர்களின் கடவுள் இப்படி நாம் ஒரே கடவுளை சுக்கு நூறாக ஒடித்துப் போட்டுள்ளோம்.

இவ்வுலகத்தில் நாம் காணும் ஏகதேசம் அத்தனை மதங்களும், பதவிக்கும் பொருளுக்கும் அடிமையாகி, உண்மையில் வியாபாரமே பண்ணுகின்றன. அவர்களுக்கு உண்மையில் பணமே கடவுள். அவை இறைவன் கூறிய பரம

உண்மைகளை மறைத்து, அசுத்தமான சாஸ்திரங்களை உண்டு பண்ணி உலகத்தையே குழப்புகின்றன. மேலும் சிலர் மத வெறியினால் மற்ற மதங்களிலிருக்கும் ஜீவன்களைத் துன்புறுத்துகின்றனர். கிறிஸ்தவ மத பைபிளை மட்டுமே சுமார் 55 தடவைகள் திருத்தியதாகக் கேள்விப்படுகிறோம். அதேபோல் புராணங்களையும் திருத்தி கலப்படம் செய்துள்ளனர்.

## *1.2.* பரம இறைவனை அறிவது சுலபமல்ல

ஆனால் உண்மையென்ன? பகவத் கீதையில், ஸ்ரீ கிருஷ்ணர், 'நீ இந்த அண்ட சராசரங்களில் உள்ள அத்தனை அணுக்களையும் கூட எண்ணி விடலாம். ஆனால், என்னையோ, என் நாமங்களையோ, என் மகிமைகளையோ நீ ஒருபோதும் அறிய மாட்டாய். அதே சமயம் என்னிடம் சரணடைந்த ஆத்ம பக்தனுக்கு உண்மையான பர ஞானத்தை நான் கொடுப்பேன்' என்று கூறுகிறார்.

இந்த உலகத்தில் பெரும்பாலோர் ஸ்ரீகிருஷ்ணரை ஒரு அவதாரம் என்றே எண்ணுகிறார்கள். விஷ்ணு புராணம் கூறுவது சரியல்ல என்பதை ஸ்ரீசைதன்ய மஹாபிரபு அருமையாக விளக்கியுள்ளார். மேலும் விஷ்ணு புராணத்தை மொழிபெயர்த்த H.H. Wilson என்ற வெளி நாட்டுக்காரர் சில சமஸ்கிருத வார்த்தைகளை சரியாக மொழி பெயர்க்கவில்லை என்பதையும், ஸ்ரீல ஜீவ கோஸ்வாமியின் சந்தர்பாவில் விஷ்ணு புராணத்தில் வரும் வார்த்தைகளின் உண்மையான அர்த்தத்தையும் அறிகிறோம்.

பரம இறைவனை அறிவது சுலபமல்ல. இதனால் தான் பகவான் ஸ்ரீகிருஷ்ணர், பகவத் கீதையில் (9.11) இந்த சுலோகத்தை கூறுகிறார்:

> அவஜானந்தி மாம் மூடா, மானுஷீம் தனும் ஆஸ்ரிதம்
> பரம் பாவம் அஜானந்தோ மம பூத மஹேஸ்வரம்

“நான் மனிதனைப் போன்ற வடிவில் இந்த உலகத்தில் தோன்றும் போது, முட்டாள்கள் என் உண்மையான பரம நிலையை அறிய மாட்டார்கள்.”

## *1.3.* ஏராளமான தெய்வங்கள்

இங்கே நீங்கள் கேட்கலாம், ‘இறைவன் ஒருவன் என்றால், ஏன் கோடிக்கணக்கான தெய்வங்களை ஜனங்கள் வணங்குகிறார்கள்?’ அதற்கு சாஸ்திரங்களை நன்றாக அலசினால் மட்டுமே உண்மை தெரியும்.

நாம் வாழும் பூலோகம், மகா விஷ்ணுவின் உரோமக் கோளங்களிலிருந்து தோன்றும் எண்ணிக்கையற்ற பிரம்மாண்டங்களில் ஒன்றில் அடங்கியிருக்கும் 14 லோகங்களில் ஒன்றே. நம் பிரம்மாண்டத்தை பராமரிக்க 33 கோடி தேவர்கள் உள்ளனர் என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. இந்த தேவர்களுக்கு தலைவர்களாக ஈஸ்வரர்களும், அதற்கு மேலாக மஹேஸ்வரர்களும் உள்ளனர். இந்த தெய்வங்கள் எவரும் பரம இறைவன் அல்ல. அவர்கள் பரம இறைவனின் சேவகர்கள்.

## *1.4.* தெய்வங்களை யார் வழிபடுவார்கள்*?*

தெய்வங்களை நாம் தனியாக வணங்கத் தேவையேயில்லை. ஒரு நாட்டில் அரசன் ஒருவனே. ஆனால் அவனுக்கு மந்திரிகள் ஏராளமானவர் இருப்பார்கள். ஆனால் அந்த மந்திரிகளை நம்பி ஆதாய எண்ணமுடன் பின்னால் ஏராளம் பேரும் இருப்பார்கள். இதேபோல் ஒருவன் அற்பமான பௌதீக ஆசைகளுக்கு அடிமையாக இருந்தால், அவனது மனம் பரம இறைவனிடம் செல்லாது. கீதையில் ஸ்ரீகிருஷ்ணர் கூறியது போல், அவனது மனம் பிற தெய்வங்களையே வழிபடத் தூண்டும். இது விஞ்ஞான பூர்வமான உளவியல். ஆசைகளைத் துறந்தவனுக்கு மட்டுமே பரம இறைவனை வழிபட ஆசை வரும்.

காமைஸ் தைஸ் தைர் ஹ்ருத ஞானா
ப்ரபத்யந்தே அன்ய தேவதா
தம் தம் நியமம் ஆஸ்தாய
ப்ரக்ருத்யா நியதா ஸ்வயா (பகவத் கீதை 7.20)

ஸ்ரீ கிருஷ்ணர் கூறுகிறார், "எவனுடைய புத்தி பௌதீக உலக ஆசைகளினால் திருடப்பட்டுள்ளதோ, அவன் என்னை வணங்க மாட்டான். பதிலாக அவனது அற்ப ஆசைகளைத் திருப்தி செய்ய அவன் என் சேவகர்களான தேவர்களை விதிகள் மூலமாக வழிபடுவான். இவ்வாறு தன் அற்ப தன்னல ஆசைகளினால் தூர இழுக்கப்பட்டு என்னையன்றி தேவர்களை வழிபடுகிறான்."

## *1.5.* பரம இறைவன் ஒருவரே

இந்துக்கள், கிறிஸ்தவர்கள், மற்றும் முகமதியர்களின் புனித நூல்களும் பரம இறைவனை பல விதங்களாக காட்டுகின்றன. ஆனால் வேதங்களால் கூட பரம இறைவனை பூரணமாக அறிய முடியாது (வேதேஷு துர்லபம்) என்று பிரம்ம சம்கிதை கூறுகிறது. அந்த பரம இறைவன் கூட, 'நான் வேதங்களுக்கெல்லாம் அப்பாற்பட்டவன். வேதங்களால் என்னை அறிய முடியாது' என்று கூறுகிறார். எனவே வேதங்களுக்கும் அப்பாற்பட்ட சாஸ்திரங்களைத் தான் நாம் நாட வேண்டும். சுமார் 500 வருடங்களுக்கு முன் ஸ்ரீகிருஷ்ணரே ஸ்ரீ சைதன்ய மகாபிரபுவாக அவதரித்து, அப்படிப்பட்ட சாஸ்திரங்களை நமக்குக் காட்டினார். அவர், நிரந்தர ஆகாஷ சப்தாவிலிருந்து பற்பல அரிய சாஸ்திரங்களை ஆறு கோஸ்வாமிகள் மூலம் நம் உலகத்துக்குக் கொண்டு வர வைத்தார். அவை ஸ்ரீமத் பகவத் கீதையை விடவும் மிகவும் மேலானவை.

## *1.6.* பரம இறைவன் யார்*?*

பிரம்ம சம்ஹிதை, ஸ்ரீமத் பாகவதம், ஸ்ரீ சைதன்ய சரிதாம்ருதம் என்பவை அனைத்து சாஸ்திரங்களிலும்

மேலானவை. இவை அனைத்தும் ஒன்றையே உறுதியாக திரும்பத் திரும்பக் கூறுகின்றன:

ஈஸ்வர பரம கிருஷ்ணா
சச்சிதானந்த விக்ரஹா
அனாதிர் ஆதிர் கோவிந்தா
சர்வ காரண காரணம் ... (பிரம்ம ஸம்கிதை 5.1)

"ஸ்ரீ கிருஷ்ணர் மட்டுமே எல்லா கடவுள்களுக்கும் மேலான பரம இறைவன். அவர் சச்சிதானந்த மயமானவர். அவர் மட்டுமே ஆதி முதலானவர். அவரே எல்லாவற்றுக்கும் சர்வ காரணம்."

ஸ்ரீகிருஷ்ணரும் பகவத் கீதையில் இதையே கூறுகிறார்:
அஹம் ஸர்வஸ்ய ப்ரபவோ
மத்த: ஸர்வம் ப்ரவர்த்ததே
இதி மத்வா பஜந்தே மாம்
புத்தா பாவ ஸமன் விதா: (பகவத் கீதை 10.8)

"நானே எல்லாவற்றிற்கும் மூலம். எல்லாமே என்னிடமிருந்து மட்டுமே தோன்றுகின்றன. எல்லா கடவுள்களும் எனக்கே பணிவிடை செய்கின்றனர். இதை முழுவதுமாக உணர்ந்த புத்திசாலி, தன் முழு இதயத்தால் என்னை மட்டுமே வணங்கி சேவை செய்வான்."

இதே உண்மையைத்தான் ஸ்ரீமத் பாகவதமும் "கிருஷ்ணஸ்து பகவான் சுயம்" என்று கூறுகிறது. அதன் முதல் 9 காண்டங்களும் விஷ்ணுவே பெரியவர் என்றும் பின்னர் ஸ்ரீமன் நாராயணரே பெரியவர் என்றும் கூறி, கடைசியில் 10 ஆவது காண்டத்தில், 'இதுவரை கூறப்பட்டவை அனைத்தும் ஸ்ரீகிருஷ்ணரின் அம்சமோ, அல்லது அவரது அம்சத்தின் அம்சமோதான்" என்று கூறி படிப்படியாக பரம உண்மையை விளக்குகிறது.

# 2. பரம இறைவனின் நாம மகிமை

இறைவனின் நாமங்களின் மகிமைகளைப் பற்றி ஒவ்வொரு மதமும் கூறுகிறது. ஆனால் இந்த நாமங்களின் உண்மையான மகிமைகளைப் பற்றி வெகு சிலர் மட்டுமே அறிவார்கள். பரம இறைவன் ஒருவனே என்றாலும், அவரது நாமங்களின் சக்திகள் வித்தியாசப் படுகின்றன.

## *2.1.* மூன்று விதமான நாமங்கள்

இறைவனின் நாமங்களை 3 விதங்களாகப் பிரிக்கலாம் என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன.

### 2.1.1. கௌன (சாதாரண) நாமங்கள்

ஜகதீஸா, அல்லா, ஜெஹோவா, ஈஸ்வரா, இறைவன், பரமாத்மா, இப்படிப்பட்ட நாமங்கள் கௌன நாமங்கள். இவை இறைவனை பயத்துடனும் மரியாதையுடனும் வழிபட வைக்கின்றன. இப்படிப்பட்ட நாமங்களை துதிக்கும் பக்தர்கள் நரகத்துக்குப் போவதை தவிர்த்து மோட்சத்துக்குப் போக விரும்புவார்கள். இவர்கள் அனேகமாக தாமஸ அல்லது ராஜஸ குணங்களைக் கொண்டவர்களாக இருப்பார்கள். மந்த அறிவினால் மற்ற ஜீவ ராசிகளைக் கொன்று அதன் மாமிசங்களைப் பலர் சாப்பிடவும் செய்வார்கள். ஆனால் அது பாவம் என்பது அவர்களுக்குப் புரியாது. ஒருவேளை புரிந்தாலும், அவர்கள் தங்கள் நாக்குக்கு அடிமையானதால், உண்மையை உணர மாட்டார்கள். அவர்களின் இறை வழிபாடு முழுவதுமாக சுய நலம் கொண்டதாகவே இருக்கும். தாமஸ குணத்தை அதிகமாக கொண்டவர்கள் மத வெறியர்களாகவும் காணப்படுவார்கள்.

## 2.1.2. முக்கிய நாமங்கள்

முக்கிய நாமங்கள் இறைவனை ஐஸ்வர்ய பாவத்துடன் வழிபட உதவி செய்கின்றன. ஸ்ரீ நாராயணா, ஸ்ரீ கிருஷ்ணா, ஸ்ரீ ராமா என்பவை முக்கிய நாமங்களின் உதாரணங்கள். இவை உயர்ந்த ஆன்மீக உலகங்களை அடைய உதவி செய்கின்றன. இப்படிப் பட்ட நாமங்களை துதிக்கும் பக்தர்கள் பெரும்பாலும் சாத்விக குணங்களைக் கொண்டவர்களாக இருப்பார்கள். மற்ற ஜீவ ராசிகளைக் கொன்று அதன் மாமிசங்களை சாப்பிட மாட்டார்கள். சாத்விக உணவு வகைகளை மட்டுமே விரும்புவார்கள்.

இந்த வழிபாட்டில் ஐஸ்வர்ய பாவம் மிகுந்து இருப்பதால், ஸ்ரீ கிருஷ்ணரை ஒரு அவதாரம் என்றே நினைப்பார்கள். ஸ்ரீ விஷ்ணு புராணம் போன்றவற்றில் அதிக ஈடுபாடுகள் இருக்கும். இவர்களுடைய சித்தத்தில் வைகுந்தத்தை அடைவது முக்கியமான குறிக்கோளாக இருக்கும்.

## 2.1.3. உத்தம (பிரேம) நாமங்கள்

அனைத்து நாமங்களிலும் மேலானது உத்தம நாமங்கள். அவை பிரேம பக்தியினால் உண்டானவை. ராதா மதன் மோகன், ராதா ரமணா, ராதா கோவிந்தா, யசோதா நந்தனா, சியாம சுந்தரா, கோபி நாதா என்பவை இதன் சில உதாரணங்கள். இவை இறைவனை அன்புடனும், பாசத்துடனும் வழிபடச் செய்பவை. உத்தம நாமங்களின் மூலம் வழிபடுபவர்கள் நிச்சயமாக சுத்த சாத்விக குணங்களைக் கொண்டவர்களாகவே இருப்பார்கள். இந்த நாமங்கள் ஒரு சாதகனை மிகவும் உயர்ந்த ஆன்மீக உலகங்களை அடைய வைக்கின்றன. இவர்களுடைய சித்தத்தில் கோலோகமும் பிருந்தாவனமும் எப்போதும் அமர்ந்திருக்கும். மஹா மந்திரத்தில் நாம் முக்கிய நாமங்களையேக் கண்டாலும், பிரேமை நிலையை அடையும் போது அவை பிரேம நாமங்களாகவே ஒலிக்கும்.

## *2.2.* உத்தம பக்தர்கள்

உத்தம பக்தர்களின் வழிபாட்டில் சுய நலம் இருக்கவே இருக்காது. எனவே அனைத்து மோட்சங்களையும் கூட உதறி விடுவார்கள். அவர்கள் கர்மம், ஞானம், யோகம் அனைத்தையும் கடந்தவர்கள்.

*ஞான கர்ம யோக தர்மே,*
*நஹே கிருஷ்ண வஸ*
*கிருஷ்ண வஸ ஹேது ஏக,*
*ப்ரேம பக்தி ரஸ (சைதன்ய சரிதாம்ருதம் ஆதி 17.75)*

"ஞான மார்க்கத்தையோ, கர்ம மார்க்கத்தையோ அல்லது ராஜ மற்றும் குண்டலினி போன்ற எந்த யோகத்தாலும் ஸ்ரீகிருஷ்ணரைக் கவர முடியாது. ஸ்ரீ கிருஷ்ணரிடம் பிரேம பக்தியுடன் தன்னை முழுவதுமாக அற்பணித்த அந்த பிரேம பக்தரால் மட்டுமே ஸ்ரீ கிருஷ்ணரைக் கவர முடியும்."

உத்தம பக்தர்களின் ஒரே குறிக்கோள், ஸ்ரீகிருஷ்ணரை எப்போதும் மகிழ்ச்சி படுத்துவதே.

அன்யாபிலாசித சூன்யம்
ஞான கர்மாதி அனாவ்ருதம்
ஆனுகூல்யேன கிருஷ்ணானு
சீலனம் பக்திர் உத்தமா .. (CC Madhya 19.167)

'உத்தம பக்தர்கள் கர்மம், ஞானம், மாயாவாதம் அனைத்தையும் உதறி எறிந்து விட்டு, ஸ்ரீகிருஷ்ணரை மகிழ்ச்சிப் படுத்துவதற்காக மட்டுமே வேண்டிய செயல்களில் ஈடுபடுவார்கள்."

இந்த உத்தம பக்தர்களின் மூச்சில் எப்போதும் உத்தமமான பிரேம நாமங்கள் மட்டுமே இருக்கும். ஸ்ரீ சைதன்ய மகாபிரபுவின் கீழ் வரும் ஸ்ரீ கிருஷ்ண வழிபாட்டில், இந்த பிரேம நாமங்களே உயிர் மூச்சாக இருக்கும்.

உத்தம நாமங்களை ஜெபிப்பவர்கள், ஸ்ரீ கிருஷ்ண பக்தியில் மென்மேலும் உயர்ந்து, அவர்கள் சுத்த சத்வம்,

அதற்கும் மேலான விசுத்த சத்வத்திலும் கூட செல்லுவார்கள். ஸ்ரீ கிருஷ்ணர் அவதாரமல்ல அவர் அவதாரி என்றும், மூன்று விதமான விஷ்ணுக்களும், ஸ்ரீமன் நாராயணரும் உண்மையில் ஸ்ரீ கிருஷ்ணரிடமிருந்து தோன்றியவர்கள் என்ற உண்மையையும் அவர்கள் தெளிவாக உணர்வார்கள்.

## *2.3.* ஹரி நாமம் பிரேம பக்தியை கொடுக்கும்

ஒருவன் மகா மந்திரத்தை தகுந்த குருவிடமிருந்து பெற்று, விடாமல் தொடர்ந்து ஜெபித்தால் ஸ்ரீகிருஷ்ணரிடம் பிரேம பக்தி கிடைக்கும். இதை விட ஒரு ஜீவனுக்கு பெரிதாக கிடைக்க வேண்டியது எதுவும் இல்லை.

## *2.4.* ஹரி நாமம் பில்லி சூன்யத்தை அழிக்கும்

சில நாடுகளில், அதிலும் குறிப்பாக தென்னிந்தியாவில் பில்லி சூன்யத்தைப்பற்றிக் கேட்கலாம். அதனால் பாதித்தவர்களும் நிறைய உண்டு. பேய் பிசாசுகளை மந்திரங்களால் அடக்கி பாவச் செயல்களை செய்து பணம் சம்பாதிப்பார்கள்.

ஆனால் எவனொருவன் ஹரி நாமங்களை தினமும் ஜெபிக்கிறானோ அவனிடம் எந்த பில்லி சூனியமும் நெருங்க முடியாது.

## *2.5.* ஹரி நாமம் பேய் பிசாசுகளை துரத்தும்

ஸ்ரீமத் பாகவதத்தில் பேய் பிசாசுகளைப் பற்றிக் கூறப்பட்டுள்ளது. நாம் வாழும் பூலோகத்திற்கு சமீபத்தில் மேலாக புவர் லோகமும் பித்திர லோகமும் உள்ளன. இந்த லோகங்களை நாம் நம் கண்களால் பார்க்க முடியாது.

அகால மரணத்தால் இறந்தவர்களும், மூதாதையர்களை வழிபட்டவர்களும் இந்த பித்ர லோகத்தில்

கொஞ்ச காலம் இருப்பார்கள். இவற்றில் கெட்ட ஆவிகள் நம் பூவுலகத்திலுள்ளவர்களுக்கு தொந்தரவு செய்வார்கள். ஆனால் ஒருவன் ஹரி நாம ஜெபம் செய்து கொண்டிருந்தால், எவ்விதமான துஷ்ட ஆவிகளும் நெருங்க முடியாது.

## *2.6.* ஹரி நாம ஜெபமே கலியுக தர்மம்

ஹரே கிருஷ்ணா மகா மந்திரத்தையும், நரசிம்ஹ ஸ்தோத்திரத்தையும் சாஸ்திரங்கள் மிகவும் புகழ்ந்து கூறுகின்றன. இந்த கலியுலகத்தில், கலியின் உக்கிரத்தால், ஹரி நாம மந்திரத்தைத் தவிர மற்ற எந்த மந்திரத்தினாலும் பலன் கிடைக்காது:

ஹரேர் நாம ஹரேர் நாம,
ஹரேர் நாமய்வ கேவலம்
கலோ நாஸ்தி ஏவ நாஸ்தி, ஏவ
நாஸ்தி, ஏவ நாஸ்தி ஏவ கதிர் அன்யதா

“கலியகத்தில் ஹரி நாமத்தைத் தவிர வேறு எந்த மந்திரங்களினாலும் பயனில்லை, பயனில்லை, பயனில்லை" - பிருகன் நாரதிய புராணம்.

எனவே நாம் மகா மந்திரமான ஹரே கிருஷ்ணா மந்திரத்தை ஜெபித்து அனைத்து நன்மைகளையும் பெற்று விடலாம்.

ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண
கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே
ஹரே ராம ஹரே ராம
ராம ராம ஹரே ஹரே

மற்றும் ஸ்ரீ நரசிம்ம ஸ்தோத்திரத்தை தினமும் பாடினால், அனைத்து பயங்களும் பறந்து விடும்.

# 3. ஜீவ தத்துவம்

## *3.1* ஜீவன்களின் பிறப்பிடம்

நாம் அனைவரும் ஜீவன்கள். நாம் நம் உடலல்ல. நாம் எத்தனை பிறவிகள் எடுத்தாலும், நம் ஜீவன் எப்போதும் ஒரே ஜீவனே. நாம் இறக்கும் போது, எப்படி ஒருவன் கிழிந்த ஆடையை எறிந்து விட்டு புது ஆடையை அணிகிறானோ அதே போல், நாம் நம் உடல்களை மாற்றிக் கொண்டேயிருக்கிறோம். இந்த ஜீவனின் பிறப்பிடம் என்ன? எப்போது இவை தோன்றின?

நாம் அனைவரும் பரம இறைவனான ஸ்ரீகிருஷ்ணரின் ஒரு அங்கமான ஜீவ சக்தியிலிருந்து வந்தவர்கள். பகவான் கிருஷ்ணருக்கு மூன்று விதமான சக்திகள் உள்ளன: (1) அந்தரங்க சக்தி, (2) ஜீவ சக்தி, (3) ஜட (மாயா) சக்தி. அவரது மிக உயர்ந்த அந்தரங்க சக்தியிலிருந்து தான் விதம் விதமான ரூபங்கள் தோன்றுகின்றன. அவரது மாயா சக்தி அத்தனை பிரபஞ்சங்களையும் உண்டு பண்ணுகின்றன. ஆனால் சூரியனிலிருந்து அளவற்ற ஒளிக்கதிர்கள் வருவது போல், பகவானின் ஜீவ சக்தியிலிருந்து அத்தனை ஜீவன்களும் தோன்றுகின்றன. எனவே அவரது ஜீவ சக்தியிலிருந்து வந்தவர்கள் தான் நாம்.

சூர்யாம்ஸ கிரண, யைச்சே அக்னி ஜ்வாலா சயா
ஸ்வாபாவிக கிருஷ்ணேர தின பிரகார சக்தி ஹயா

“சூரியனிலிருந்து கிளம்பும் கிரணங்களைப் போல் ஜீவாத்மாக்கள், ஸ்ரீ கிருஷ்ணரின் ஜீவ சக்தியிலிருந்து தோன்றுகின்றன” - (சைதன்ய சரிதாம்ருதம் மத்ய 20.108)

## ***3.2*** **ஜீவன்கள் எப்போது பிறந்தன*?***

இப்போது ஒரு கேள்வி வரலாம்: நாம் பகவான் ஸ்ரீகிருஷ்ணரின் ஜீவ சக்தியிலிருந்து எப்போது தோன்றினோம் என்பதே அது. அதற்குப் பதில் சாஸ்த்திரங்களில் நாம் காணலாம்:

அனைத்து ஜீவன்களும் ஸ்ரீகிருஷ்ணரிடமிருந்து தோன்றியவைகள். எனவே நம் ஜீவனுக்கு எவ்வளவு வயது? ஸ்ரீகிருஷ்ணருக்கு எவ்வளவு வயதோ அதுதான் நம் வயதும். நமக்கு தோற்றமும் முடிவும் இல்லை. ஏனென்றால் பகவான் ஸ்ரீகிருஷ்ணருக்கு ஆதியுமில்லை அந்தமுமில்லை.

## ***3.3*** **ஜீவன்களின் நித்ய குணங்கள்**

நாம் அனைவரும் பகவான் ஸ்ரீகிருஷ்ணரிடமிருந்து தோன்றியதால், நமக்கு பல குணங்கள் பகவானால் கொடுக்கப் பட்டுள்ளன. அவை என்ன? பகவான் ஸ்ரீகிருஷ்ணருக்கு 64 குணங்கள் உள்ளன. அவற்றில் நமக்கு 50 குணங்கள் ஓரளவாக உள்ளன. இவை அனைத்துக்கும் மேலாக ஒரு குணம் நம்மை அவருடன் நெருக்கமாக பிணைத்துள்ளது. அது என்ன?

ஜீவேர சொரூப ஹயா
கிருஷ்ணேர நித்ய தாஸா
கிருஷ்ணேர தடஸ்தா சக்தி
பேத அபேத பிரகாஸா

“ஜீவனின் நிரந்தரமான (நித்யமான) குணம் என்ன? பகவான் ஸ்ரீகிருஷ்ணரின் தடஸ்த (ஜீவ) சக்தியிலிருந்து தோன்றியதால், ஒவ்வொரு ஜீவனும் பகவான் ஸ்ரீகிருஷ்ணரின் நித்ய சேவகன்.” - (சைதன்ய சரிதாம்ருதம் மத்ய 20.107)

## *3.4* ஜீவன்களுக்கு ஜாதி கிடையாது

தற்போது அநேகமாக எல்லா மதங்களிலும் சாதி ஒரு பெரும் பிரச்சினையாக உள்ளது. ஜீவ தர்மத்தின் படி சாதிகள் கிடையாது. எல்லா ஜீவன்களும் ஆண்டவனின் ஜீவ சக்தியிலிருந்து தோன்றியவை. தன் நித்ய குணத்தின் படி அவை அனைத்தும் பரிசுத்தமானவை. ஆனால், இந்த ஜீவாத்மாக்கள் பூதவுலகங்களில் தானே தனியாக ஆனந்தமாக இருக்க வேண்டும் என்ற ஆசையினால், கோடிக்கணக்கான பிரம்மாண்டங்களில் பிறந்து இறந்து அலைந்து கொண்டிருக்கின்றன.

பலர், பகவத் கீதையை அரை குறையாகப் படித்து விட்டு, ஸ்ரீ கிருஷ்ணர் ஜாதியை உண்டுபண்ணியிருப்பதாகக் கூறுகிறார்கள். பகவத் கீதையில் ஸ்ரீ கிருஷ்ணர் கூறியிருப்பது 'வர்ணங்களைப்' பற்றி - சாதிகளைப்பற்றி அல்ல. வர்ணங்கள் என்றால் சமஸ்கிருதத்தில் 'குணங்கள்' அல்லது சுபாவங்கள் என்று பொருள்.

சாதுர் வர்ண்யம் மயா ஸ்ரிஷ்டாம்
குண கர்ம விபாகஸக*:*
தஸ்ய கர்த்தாரம் அபி மாம்
வித்ய கர்த்தாரம் அவ்யயம் *... (*பகவத் கீதை *4.13)*

“நான்கு விதமான குணங்களுடன் செயல் படுபவர்களை அவர்களுடைய சுபாவங்களைப் பொறுத்து வர்ணங்களாகப் பிரித்துள்ளேன். உலகம் இயங்குவதற்காக நான் இந்த முறையை (வர்ணங்களாக) அமைத்து இருந்தாலும், நான் இதில் சம்பந்தமில்லாதவன். நான் இவற்றிற்கு அப்பால் உள்ளவன், என்றும் நிரந்தரமானவன். “

இந்த வர்ணம் ஒருவனுக்குப் பிறப்பால் வருவது அல்ல. மாறாக அது அவனது குணத்தினால் வருவது.

பிறப்பால் அனைவரும் சூத்திரர்களே (ஜன்மன ஜாயதே சூத்ரஹ) என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. உலகத்தில் உள்ள அனைத்து மனிதர்களையும் அவர்களது குணங்களைப் பொறுத்து 4 விதங்களாகப் பிரிக்கலாம்:

1) புத்தியை உபயோகித்து வாழ்பவர்கள்
2) வலிமையை உபயோகித்து வாழ்பவர்கள்
3) வியாபாரம் (வினியோகம்) செய்து வாழ்பவர்கள்
4) ஓடி உடலால் கூலி வேலை செய்து வாழ்பவர்கள்

இந்த உலகத்தில் நாம் எங்கு சென்றாலும் இந்த 4 விதமான ஜீவராசிகளை காணலாம். இதற்கும் ஜாதிகளுக்கும் எந்த வித சம்பந்தமும் கிடையாது. ஏனென்றால் இது ஜீவ தர்மத்தின் சுபாவங்கள். இதை ஆங்கிலத்தில் "Division of Labor" என்பார்கள்.

இந்த 4 விதமான சுபாவங்கள் இல்லையென்றால் இந்த உலகம் இயங்காது. நம் உடலிலேயே இதை சதவீதங்களாகக் காணலாம்:

10% தலை (புத்தி)
20% மார்பும் கைகளும் (போர் புரியும் வலிமை)
30% வயிற்றுப் பாகம் (வினியோகம்)
40% கீழ்ப்பாகமும் கால்களும் (ஓடி வேலை செய்ய)
மொத்தம் 100%

இந்த உலகத்து அனைத்து மனிதர்களை எடுத்தாலும், இதையே நாம் காண்கிறோம்.

10% ஆசிரியர்கள் (பிராமணர்கள்)
20% ராணுவ மற்றும் தலைவர்கள் (சத்திரியர்கள்)
30% வியாபாரிகள் (வைசியர்கள்)
40% வேலைகள் செய்பவர்கள் (சூத்திரர்கள்)
மொத்தம் 100%

இது ஜாதியல்ல. உலகம் முழுவதும் உள்ள உண்மை! ஜாதிகளுக்கும் இந்த வர்ணங்களுக்கும் (குணங்களுக்கும்) சம்பந்தமில்லை. இங்கே முக்கியமாகக் காண வேண்டிய ஒன்றும் உள்ளது. உதாரணமாக நாம் நம் கால்களை மூளை செய்யும் வேலையையும் மூளை செய்யும் வேலையை கால்களுக்கும் கொடுக்க முடியாது. அப்படி நாம் செய்தால் ஒரு கணம் கூட நம்மால் உயிருடன் இருக்க முடியாது! அதே போல் சூத்திரர்களை பிராமணர்களாகவோ, பிராமணர்களை சூத்திரர்களாகவோ வேலை செய்ய வைக்க முடியாது. ஏனென்றால் அவர்களது வர்ணங்கள் (குணங்கள்) வெவ்வேறு.

நாம் மேலே கண்டவாறு, இந்த வர்ணங்கள் ஒருவனுக்குத் தன் பிறப்பால் வருவதல்ல. குணத்தால் வருபவை. நாம் சாஸ்திரங்களை அலசும் போது, அங்கே வர்ணம் ஒருவனின் பிறப்பால் வருவது அல்ல என்று தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. உண்மையில் வேதங்களிலோ, புராணங்களிலோ நாம் ஜாதியைக் காண முடியாது. அப்படியானால் இதை, முக்கியமாக இந்தியாவில், யார் கொண்டு வந்தார்கள்? இது சில ஆதிக்கமான மனிதர்கள், தங்கள் சுய நலனுக்காகக் கொண்டு வரப்பட்டவை. ஜாதிகள் கிடையாது, ஜாதிகள் இருக்கவும் கூடாது. இதை அறவே ஒழிக்க வேண்டும்.

# *4.* வழிபாட்டு முறைகளும் பயன்களும்

பகவத் கீதையில், மனிதர்களின் நான்கு விதமான வழிபாட்டு முறைகளைப் பற்றிக் கூறப்பட்டுள்ளது:

*யாந்தி தேவா வ்ருத்தான் தேவான்*
*பித்ர் யாந்தி பித்ர் வ்ரதா:*
*பூத்தானி யாந்தி பூத்தேஜ்யா*
*யாந்தி மத் யாஜினோ மாம் (பகவத் கீதை 9.25)*

“தேவர்களை வழிபடுபவன் தேவர்களை அடைவான். இறந்த மூதாதையர்களை வழிபடுபவன், அவர்களுடைய (பித்ரு) லோகத்தை அடைவான். பேய் பிசாசுகளை வழிபடுபவன் அந்த பேய் பிசாசுகளிடம் போய் பிறப்பான். ஆனால் என்னை ‘மட்டும்’ வழி படுபவன் என்னையே அடைவான்.”

## *4.1.* பேய் பூதங்களை வணங்குபவர்கள்

மேற்கண்ட சுலோகத்தில் எவரொருவர் பேய் பூதங்களை வழிபடுகிறாரோ, அவர் பேய் பிசாசுகளிடம் போய் பிறப்பார் அல்லது சேருவார் என்று பகவான் ஸ்ரீகிருஷ்ணராலேயே சொல்லப்பட்டுள்ளது. மேலும் நாம் பேய், பிசாசு, கணங்களைப் பற்றியுள்ள கீழ்க்கண்ட உண்மைகளை சாஸ்திரங்களிலிருந்து காண்கிறோம்.

10,000 பேய்களுக்கு அதிபதி 1 பூத கணம்
10,000 பூத கணங்களுக்கு அதிபதி 1 பிரேதா
10,000 பிரேதாக்களுக்கு அதிபதி 1 வேதாளை
10,000 வேதாளைகளுக்கு அதிபதி 1 பிரம்ம ராக்ஷஸி
10,000 பிரம்ம ராக்ஷஸிகளுக்கு அதிபதி சிவ பெருமான்

## *4.2.* மூதாதையர்களை வணங்குபவர்கள்

பேய் பிசாசுகள் வசிக்கும் அதே புவர் லோகத்தில்

இருக்கும் இன்னொரு பகுதி தான் பித்ர லோகம். இறந்த பின்னர் பெரும்பாலான உயிர்கள் இங்கே சென்று, சில காலம் முன்னால் இறந்த மூதாதையர்களுடன் வசிக்கும்.

*பித்ர் யாந்தி பித்ர் வ்ரதா: (கீதை 9.25)*

அதன் பின்னர் யம ராஜனின் கட்டளை வரும் போது அவர்களுக்கு, தாங்கள் செய்த பாவ புண்ணியங்களுக்குத் தகுந்தவாறு, அவர்கள் நரகத்திலும், சொர்க்கத்திலும் வசிப்பார்கள். நிரந்தரமான சொர்க்கமோ நரகமோ கிடையாது. அனுபவித்த பின்னர், 84 லட்சம் வகையான ஜீவ ராசிகளில் ஏதாவது ஒன்றில் பின்னர் பிறப்பார்கள்.

## *4.3.* தெய்வங்களை வணங்குபவர்கள்

தெய்வங்களுக்கு ஈஸ்வரர்கள் என்று பெயர். இவர்கள் பகவான் ஸ்ரீகிருஷ்ணருக்கு நேரடியாக சேவகம் செய்பவர்கள். அதனால் தான் ஒருவன் எந்த ஒரு தெய்வத்தை வழிபட்டாலும், அந்த வழிபாடு பகவான் ஸ்ரீகிருஷ்ணருக்கே போகிறது. ஆனால் தெய்வங்களை வழிபடுபவன் கிருஷ்ணரிடம் செல்ல மாட்டான். இதை ஸ்ரீகிருஷ்ணர் கீதையில் மிகத் தெளிவாக,

*யாந்தி தேவா வ்ருத்தான் தேவான் (கீதை 9.25)*

"தேவர்களை வழிபடுபவர்கள் அந்த தேவர்களை அடைகிறான் (கீதை 9.25)" என்று கூறுகிறார். எனவே ஒருவன் ஸ்ரீகிருஷ்ணரை அடைய வேண்டுமானால், அவரை மட்டுமே வழிபட வேண்டும். இதைத்தான் அவர்:

*யாந்தி மத் யாஜினோ மாம் (கீதை 9.25)*

“ஆனால் என்னை மட்டும் வழிபடுவன் என்னை அடைக்கிறான் (கீதை 9.25)" என்று கூறுகிறார்.

எனவே இங்கு நாம் நன்றாக யோசிக்க வேண்டும். ஏன் நாம் தெய்வங்களை வழிபடுகிறோம்? முன்பு நாம்

விளக்கிய படி, நமக்கு இந்த ஜட உலகத்தில் அனுபவிக்க வேண்டும் என்ற சுய நல இச்சை இருக்கிறது என்று அறிந்து கொள்ள வேண்டும்.

## 4.4. சொர்க்கம் நிரந்தரமானதல்ல

ஏராளமான மதங்கள் சொர்க்கத்தை அடைவதையே உத்தமமான குறிக்கோளாக உபதேசிக்கின்றன. கருமிகள், தங்கள் பாவ புண்ணியங்களைப் பொறுத்து நரகத்துக்கோ சொர்க்கத்தையோ செல்லுகிறார்கள். ஆனால் சொர்க்கம் நரகம் எதுவும் நிரந்தரமானதல்ல. செய்த பாவ புண்ணியங்களுக்காக அனுபவித்த பின்னர், கீதையில் கூறியிருப்பதைப் போல், அவர்கள் திரும்பவும் ஏதாவது ஒரு உலகத்தில் ஏதாவது ஒரு உடலில் திரும்பவும் பிறப்பார்கள்.

## *4.5.* பரம இறைவனை வணங்குபவர்கள்

அப்படியென்றால் யார் பரம இறைவனான ஸ்ரீகிருஷ்ணரை வணங்குவார்கள்? ஸ்ரீகிருஷ்ணர் பிரேம அன்பின் இறைவன். ஒருவனுக்கு ஸ்ரீகிருஷ்ண வழிபாட்டில் விருப்பம் வந்தால், அவன் அளவற்ற புண்ணியங்கள் செய்திருக்கிறான் என்று அர்த்தம். ஏனென்றால் கிருஷ்ண பக்தி தேவர்களுக்கும் கூட கிடைப்பதில்லை. அது மிக மிக அபூர்வம்:

தர்மாசாரி மத்யே பகுத கர்ம நிஷ்டா
கோடி கர்ம நிஷ்டா மத்யே ஏக ஞானி ஸ்ரேஷ்தா
கோடி ஞானி மத்யே ஹய ஏக ஜன முக்தா
கோடி முக்த மத்யே துர்லப ஏக கிருஷ்ண பக்தா

“தர்மங்களை சரியாக கடைப்பிடிப்பவர்களிடம் மிகவும் அபூர்வமாகத் தான் ஒரு கர்ம யோகியைப் பார்க்க முடியும். அப்படி ஒரு கோடி கர்ம யோகிகளில் ஒருவரே ஞானியாக இருப்பார். அப்படி ஒரு கோடி ஞானிகளில் ஒருவரே முக்தி பெற்றவராக இருப்பார். அப்படி ஒரு கோடி முக்தர்களில் ஒரு உண்மையான கிருஷ்ண பக்தரை காண்பது மிக மிக

அபூர்வம்." - (சைதன்ய சரிதாம்ருதம் மத்ய 19.147-148)

இதிலிருந்து கிருஷ்ண பக்தியின் உத்தமமான நிலையை நாம் அறிகிறோம்.

## 4.6. கிருஷ்ண வழிபாடும் அனைத்து தேவர்களும்

அனேகமாக ஒவ்வொருவரும் கிருஷ்ண பக்தி வழிபாட்டுக்கு வருவதற்கு முன்னால் ஏதாவது மற்ற தேவ தேவதைகளை வழிபட்டிருப்பார்கள். அவர்கள் நம்மிடம் முதலாவது கேட்கும் கேள்வி இது தான்: "நான் மற்ற தெய்வங்களை வழிபட்டு விட்டு இப்போது கிருஷ்ணரை வழிபட்டால் அந்த தெய்வங்கள் என் மேல் கோபப் பட மாட்டார்களா?"

ஆனால் உண்மையில் அனைத்து தெய்வங்களும் பகவான் ஸ்ரீகிருஷ்ணரின் சேவகர்களே. தன் விஸ்வ ரூப தரிசனத்தை அர்ஜுனனுக்கு பகவான் அளித்த போது, அர்ஜுனன் என்ன கண்டான்? அனைத்து தேவர்களும் அவரது அங்கங்களாக பகவானுக்கு சேவகம் செய்வதைக் கண்டான். எனவே பகவான் ஸ்ரீகிருஷ்ணரை ஒருவன் வழிபட்டால் போதும். அத்தனை தேவர்களும் திருப்தியடைகின்றனர்.

இதை ஸ்ரீமத் பாகவதம் ஒரு மரத்தை உதாரணமாக எடுத்து நமக்கு விளக்குகிறது. ஒரு மரத்தின் அடித்தண்டின் ஆதாரத்தில் தான் அதன் கிளைகளும், இலைகளும் உள்ளன. எனவே நாம் அந்த மரத்துக்கு எங்கே தண்ணீர் ஊற்றுகிறோம்? அடி மரத்தில் தான் ஊற்றுகிறோம். அப்படி செய்தால் தான் அத்தனை கிளைகளும் இலைகளும் வளர முடியும். மாறாக, நாம் ஒவ்வொரு இலைக்கும் கிளைக்கும் தண்ணீர் விட்டால் அந்த மரம் உண்மையில் பட்டு போகும்.

இதே போல் தான் நம் உடலும். நாம் தனித்தனியாக ஒவ்வொரு உறுப்புக்கும் உணவு ஊட்டுவதில்லை.

வயிற்றுக்கு மட்டும் தான் கொடுக்கிறோம். இதற்கு மாறாக நாம் நம் மூக்கு, காது, கால், கை இப்படி ஒவ்வொன்றுக்காக ஊட்டினால் என்ன ஆகும்? இதே போல், நாம் ஸ்ரீகிருஷ்ணரை வழிபட்டால் மட்டுமே போதும், அவரது அங்கங்களான அத்தனை தேவர்களும் உடனடியாக மகிழ்ச்சியடைகின்றனர்.

எனவே உண்மை என்ன? நாம் ஸ்ரீகிருஷ்ணரை வழிபட்டால் அத்தனை தேவர்களையும் வழிபட்டதற்கு சமம். பகவத் கீதையில் இதை பகவான் மேலும் தெளிவாகக் கூறுகிறார். நாம் வேறு தெய்வங்களை வணங்கினாலும், அந்த வழிபாடுகள் அனைத்தும் உண்மையில் கிருஷ்ணருக்கே போய் சேருகிறது என்று கூறுகிறார். நாம் எந்த தேவ தேவதைகளை வழிபட்டாலும், அவர்கள் அந்த வழிபாட்டை தனக்கென்று ஏற்க முடியாது. அவர்களுடைய இறைவனான ஸ்ரீகிருஷ்ணருக்குத்தான் கொடுத்தாக வேண்டும். இன்னமும் கூறப்போனால், நாம் தேவ தேவதைகளை வழிபட்டால், அதை விதிக்கு புறம்பானது என்றும் நேராக கிருஷ்ணரை வழிபடுவது தான் சரியான முறை என்றும் கூறுகிறார்.

## 4.7. ஸ்ரீகிருஷ்ணரும் விஷ்ணுவும் நாராயணரும்

பிரம்ம சம்கிதம், ஸ்ரீமத் பாகவதம் போன்ற விசுத்த சத்வ நூல்கள் ஸ்ரீகிருஷ்ணரே பரம இறைவன் என்று கூறினாலும், சில கர்ம சாஸ்திரங்கள் ஸ்ரீகிருஷ்ணரை ஸ்ரீமன் நாராயணர் அல்லது ஸ்ரீவிஷ்ணுவின் அவதாரம் என்று கூறுகின்றன. ஸ்ரீகிருஷ்ணர் இருப்பது ஸ்ரீமன் நாராயணர் இருக்கும் வைகுந்ததுக்கும் அப்பால் உள்ள கோலோகம். ஆனால் அவர் நம் உலகத்துக்கு வரும் போது ஸ்ரீமன் நாராயணரும் அனைத்து விஷ்ணுக்களும் அவருடன் வருகிறார்கள். விதி மார்க்கங்கள் ஸ்ரீமன் நாராயணரின் பக்கமிருந்து ஸ்ரீகிருஷ்னரைப் பார்க்கின்றன. ஆனால் மோட்சத்தையும் கூட உதறி விடும் ராக மார்க்கம் ஸ்ரீகிருஷ்ணரின் பக்கமிருந்து உண்மையைக் காண்கிறது.

## *4.8.* கிருஷ்ண பக்தி மட்டுமே மிகவும் உயர்ந்தது

ராக மார்க்கத்தைச் சார்ந்த கிருஷ்ண வழிபாடு மிகவும் பரிசுத்தமானது. இதற்கு மேல் வேறு எந்த விதமான வழிபாடும் இல்லை பகவத் கீதையில் ஸ்ரீகிருஷ்ணரும், பிரம்ம ஸம்கிதை, ஸ்ரீமத் பாகவதம் மற்றும் மிக உயர்ந்த சாஸ்திரங்களிலும் கூறியிருப்பது போல், ஸ்ரீ கிருஷ்ணரே எல்லாக் கடவுள்களிலும் மேலானவர். அவரது உலகம் ஸ்ரீவைகுண்ட லோகங்களுக்கும் அப்பால் உள்ளது.

சுயம் பகவான் ஸ்ரீகிருஷ்ணரிடம் ஒருவனுக்கு சுத்த பக்தி ஏற்பட்டால் அவன் எல்லா தேவர்களுக்கும் மேலானவனாகக் கருதப்படுகிறான். அவன் வேறு எவரையும் வழி படத் தேவையில்லை.

தேவர்ஷி பூதாப்த நிர்ணாம் பித்ருணாம்
ந கிங்கரோ நாயம் ருணீ ச ராஜன்
சர்வாத்மனா யஹ் ஸரணம் ஸரண்யம்
கதோ முகுந்தம் பரிஹ்ருத்ய கர்த்தம்

“ஸ்ரீகிருஷ்ணரிடம் முழுவதாக சரணடைந்த ஒருவன், எந்த தேவதைக்கோ, மூதாதையர்களுக்கோ, மற்ற ஜீவன்களுக்கோ, அரசருக்கோ அல்லது விருந்தினர்களுக்கோ கடன் பட்டவன் அல்ல. அவன் எவருக்கும் கீழும் இல்லை, ஸ்ரீகிருஷ்ணரையும் அவரது பக்தர்களையும் தவிர வேறு எவருக்கும் சேவை பண்ணவும் தேவையில்லை.” - (ஸ்ரீமத் பாகவதம் 11.5.41)

ஒரு குடும்பத்தில் ஒரு கிருஷ்ண பக்தன் பிறந்தாலே போதும். அவன் எத்தனையோ தலை முறைகளுக்கு மோட்சம் அளித்து விடுகிறான். அப்படி ஒருவன் சுத்தமான கிருஷ்ண பக்தனாக ஆனால், மேல் உலகத்தில் இருக்கும் மூதாதையர்கள் தங்களுக்கு மோட்சம் கிடைக்கும் என்ற ஆனந்தத்தால் குதித்து ஆடுவார்கள் என்று சாஸ்திரங்களில் எழுதப் பட்டுள்ளது.

ஸ்ரீ பத்ம புராணத்தின் படி, இந்த உலகில் நான்கு சம்பிரதாயங்கள் உள்ளன. அவை, ஸ்ரீ சம்பிரதாயம், பிரம்ம சம்பிரதாயம், ருத்ர சம்பிரதாயம், குமார சம்பிரதாயம் ஆகும். இந்த சம்பிரதாயங்களுக்குக் கூட ஸ்ரீகிருஷ்ணரையோ அவரது கோலோகத்தைப் பற்றியோ பல உண்மைகள் தெரியாது.

கீதையிலும், அனைத்து சாத்விக புராணங்களிலும், சுத்த சாத்விக புராணங்களிலும் கூறியிருப்பது போல், ஸ்ரீகிருஷ்ணருக்கு மேல் எந்தக் கடவுளும் இல்லை! அனைத்து புராணங்களிலும் மேலான ஸ்ரீமத் பாகவதத்தில் முதல் ஒன்பது அத்தியாயங்களில், ஸ்ரீ விஷ்ணு, மற்றும் ஸ்ரீமன் நாராயணர் தான் உயர்ந்தவர் என்று கூறப்பட்டுள்ளன.

ஆனால், நாம் பத்தாவது அத்தியாயத்தை அடையும் போது, எல்லாம் மாறி விடுகிறது. இதுவரை படித்த ஒன்பது அத்தியாயங்களும் பக்தர்களை தயார் செய்யவே என்று கூறி, பரம இறைவன் ஸ்ரீ கிருஷ்ணரே என்றும், மூன்று விதமான விஷ்ணுக்கள், ஸ்ரீமன் நாராயணர் மற்றும் அனைத்து அவதாரங்களும் சுயம் பகவான் ஸ்ரீ கிருஷ்ணரிடமிருந்தே தோன்றியவர்கள் என்றும் கூறுகிறது.

*ஏதே சாம்ஸ கலாஹ் பும்ஸஹ*
*க்ருஷ்ணஸ்து பகவான் ஸ்வயம்*

“இது வரையிலும் கூறப்பட்ட (ஒன்பதாவது அத்தியாயம் வரை) அத்தனையும் ஸ்ரீகிருஷ்ணரின் அம்சங்களோ அல்லது அவரது அம்சத்தின் அம்சங்களோ ஆகும். ஆனால் ஸ்ரீ கிருஷ்ணர் மட்டும் தான் சுயம் பகவான்.” - (ஸ்ரீமத் பாகவதம் *1.3.28)*

# 5. கிருஷ்ண பக்தியின் 4 தூண்கள்

கிருஷ்ண வழிபாடு மிகவும் பரிசுத்தமானது. கிருஷ்ண வழி பாட்டுக்கு மேலான வழிபாடு கிடையாது. ஆனால் இந்த வழிபாட்டில் ஈடுபட கீழ்க்கண்ட நான்கு விதிமுறைகளை அனுசரிக்க வேண்டும்.

இந்த நான்கு விதி முறைகளும் கிருஷ்ண பக்தியின் நான்கு தூண்கள் போன்றவை. எங்கெல்லாம் மாமிசம் உண்ணுதல், மது அருந்துதல், சூது ஆடுதல், மற்றும் திருமணமில்லாத உறவு கொள்ளுதல் போன்ற பாவச்செயல்கள் உள்ளதோ, அங்கெல்லாம் கொடூரமான கலி இருப்பான் என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன.

## 5.1. புலால் உண்ணாமை

மாமிசம், மீன், முட்டை போன்ற புலால் உணவு வகைகளை அறவே நிறுத்த வேண்டும். ஏனென்றால் அவை உயிர்களைக் கொன்று எடுப்பவை. மற்றும் அவை உடலுக்கும் மனதுக்கும் மிகவும் தீங்குகளை அளிப்பவை. நாம் உண்ணும் உணவே நாமாகிறோம். நாம் உண்ணும் உணவு நம் உடலை மட்டுமின்றி நம் மனம், புத்தி, ஆத்மா அனைத்தையும் பாதிக்கிறது.

எந்த ஒரு மதம் புலால் உண்பதை ஆதரிக்கிறதோ அது சுத்தமான மதம் அல்ல. அவை ஒரு போதும் நம்மை உயர்ந்த ஆன்மீக உலகத்துக்குக் கொண்டு செல்லாது. மாறாக அவை நம்மை நரகத்தில் தள்ளி விடும். திருக்குறளில் கூட வள்ளுவர் ‘புலால் உண்ணாமை’ என்ற அதிகாரத்தில் இதை மிகவும் அழகாகக் கூறியுள்ளார்.

கொல்லாத அறத்தை மேற்கொண்டொழுகுவான்
வாழ்நாள் மேல், செல்லாது உயிர் உண்ணும் கூற்று

"கொல்லாத அறத்தை மேற்கொண்டு நடக்கின்றவனுடைய வாழ்நாளின் மேல், உயிரைக் கொண்டு செல்லும் கூற்றுவனும் (எமனும்) செல்ல மாட்டான். " - (திருக்குறள் 326)

## *5.2.* மது அருந்தாமை

மது ஒருவனின் மூளையை மட்டுமின்றி, உடல், மனம் அனைத்தையும் மிகவும் பாதிக்கும். கிருஷ்ண வழிபாட்டில் ஆழ்ந்து ஈடுபடும் போது காப்பி, டீ குடிப்பதையும் கூட விட்டு விடுவது நல்லது. சில மதங்கள் மது அருந்துவதை வெளிப்படையாக வழிபாட்டு இடங்களில் கூட ஆதரிக்கின்றன. உண்மையில் அவை நம்மை நரகத்தில் தள்ளி விடும்.

உண்ணற்க கள்ளை உணில் உண்க சான்றோரான்
எண்ணப்பட வேண்டாதவர்

"அறிவை மயக்கும் கள்ளை அறிவுடையவர்கள் உண்ண மாட்டார்கள். நல்லோருடன் எண்ணப்படுதலை வேண்டாதார் மட்டுமே கள்ளை உண்பர். " - (திருக்குறள் 922)

## *5.3.* சூது ஆடாமை

சூதாடுபவனின் மனம் அழுக்கானது. அவன் குறுக்கு வழியில் ஆதாயத்தை சம்பாதிப்பதின் மேல் மட்டுமே குறிக்கோளாக இருப்பான். அவனிடம் இறை பக்தி, குறிப்பாக கிருஷ்ண பக்தி வருவதில்லை. எனவே சூதாடுவதை அறவே விட வேண்டும்.

பழகிய செல்வமும் பண்பும் கெடுக்கும்
கழகத்துக் காலை புகின்

‘சூதாடும் இடத்தில் ஒருவனுடைய காலம் கழியுமானால், அது அவனுடைய பழமையாய் வந்த செல்வத்தையும் அழிக்கும்; நல்ல குடும்பத்தையும் கெடுக்கும்.” - (திருக்குறள் 937)

## *5.4.* திருமணமற்ற தொடர்பு கொள்ளாமை

ஆண் பெண் உடல் உறவுகளில் ஒருவன் மிகவும் கட்டுப்பாடாக இருக்க வேண்டும். திருமணத்துக்கு முன்னால் எவரிடமும் உடல் உறவு வைக்கக் கூடாது. திருமணம் ஆனபின் திருமணத்துக்கு வெளியில் கண்டிப்பாக உறவு வைக்கக் கூடாது.

பிறர் மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு
அறன் ஒன்றே ஆன்ற ஒழுக்கு

“பிறனுடைய மனைவியை விரும்பி நோக்காத பேராண்மை, சான்றோர்க்கு அறம் மட்டுமின்றி நிறைந்த ஒழுக்கமுமாகும்.” - திருக்குறள் 148

### ஹரி நாம ஜெபத்தின் வலிமை

மேற்கண்ட கெட்ட பழக்கங்களை ஒருவன் இடை விடாமல் மகாமந்திரத்தை ஜெபித்து எளிதாக விட்டு விடலாம். ஹரி நாமங்களை ஜெபிக்கும் போது இதயம் தூய்மையடைந்து மேலே குறிப்பிட அனைத்து கெட்ட பழக்கங்களும் தானாகவே மாறி விடுகின்றன.

# 6. ஏன் இத்தனை மதங்கள்?

நாம் இந்த உலகத்தில் எத்தனை எத்தனையோ மதங்கள் இருப்பதைப் பார்க்கிறோம். நம் பூலோகத்தில் மட்டுமே 200 க்கும் மேலான மதங்கள் இருப்பதாக அறிகிறோம்.

நாம் நம் கல்வி அறிவை எடுத்துக் கொண்டோம் என்றால், அதில் ஒன்றாம் வகுப்பிலிருந்து ஆரம்பித்து, நாம் படிப்படியாகத் தான் கல்லூரி வரையிலும் செல்கிறோம். இதேபோல் தான் ஆன்மீகத்தில் வளர்ந்து முதுமை பெற ஒவ்வொரு வகுப்பும் நமக்குத் தேவையாகிறது.

## *6.1.* மூன்று குணங்கள்

நம் உலகத்தில் உள்ள அனைத்தும் மூன்று விதங்களான குணங்களைக் கொண்டுள்ளன என்பதை உணர வேண்டும். இது ஜீவ ராசிகளுக்கு மட்டுமில்லாமல் மதங்களுக்கும் சாஸ்திரங்களுக்கும் கூட பொருந்தும். எனவே மதங்களை தாமஸ மதங்கள், ராஜஸ மதங்கள், சாத்வீக மதங்கள் என்று பிரிக்கலாம். இதேபோல் சாஸ்திரங்களும் தாமஸ புராணங்கள், ராஜஸ புராணங்கள், சாத்விக புராணங்கள் என்று பிரிக்கப் பட்டுள்ளன.

தாமஸ மதங்கள், இறைவனுக்கு நாம் பயப்பட வேண்டும் என்றும், இல்லாவிட்டால் இறைவன் நம்மை நரகத்தில் தள்ளி விடுவார் என்றும் கூறும். அந்த மதங்கள் சொர்க்கத்தில் போய் மகிழ்ச்சியாக இருப்பதை உபதேசிக்கும். ராஜஸ மதங்கள் இறை வழிபாட்டை வைத்து பணமும் புகழும் சம்பாதிக்கத் தூண்டும். ஆனால் சாத்விக மதங்கள் சொர்க்கத்திற்கும் மேலான ஆன்மீக உலகங்களை அடைய வைக்கும்.

ஆனால் இவை அனைத்தையும் தாண்டியது சுத்த

சாத்விக மதங்கள். இவை இறைவனை அன்புடனும் பாசத்துடனும் வழிபட வைக்கும். ஸ்ரீ ராதா கிருஷ்ண வழிபாடு சுத்த சாத்விகத்தைச் சேர்ந்தது. கிருஷ்ண பக்தர்கள் மட்டும் தான் பரம கிருஷ்ண பகவானிடம் பிரேமையினால் வித விதமான பக்தி ரஸ ஆனந்தத்தைப் பெற முடியும். மேலும் அவர்களை சுத்த சத்வத்தையும் தாண்டி விசுத்த சத்துவத்தில் சேர்க்கும். இதை மற்ற மதங்களால் புரிய கூட முடியாது. இதனால் தான் ஸ்ரீமத் பாகவதம் அவற்றை ஏமாற்றும் மதம் என்று கூறுகிறது.

## *6.2.* மதங்களின் வகைகள்

உலகத்தின் உள்ள அனைத்து மதங்களையும் இரண்டு விதமாகப் பிரிக்கலாம்.

1) வேத மதங்கள் (Vedic Religions)

2) மற்ற மதங்கள் (Non-Vedic Religions)

வேத மதங்களின் வழியாக மட்டுமே விக்கிரக வழிபாட்டைச் செய்ய முடியும். மற்ற மதங்களுக்கு விக்கிரக வழிபாடு செய்ய தகுதி கிடையாது. அதற்குக் காரணம் என்ன என்பதை இங்கே அறியலாம்.

வேதங்கள் மனிதர்களால் உண்டுபண்ணப் பட்டவைகள் அல்ல. அவை எப்போதும் இருக்கும் உண்மை. காலம் காலமாக முனிவர்கள் மூலம் தீர்க்க தரிசனமாக வெளியிடப்பட்டவை. எனவே வேத வாக்கியங்கள் அழியாதவை. அவை எழுதப்பட்டவைகள் அல்ல. வேதங்கள் தெய்வீக ஒலி (Sabda) வடிவமாகத் தோன்றியவை. அவைகள் காலப்போக்கில் ஒருவேளை அழிந்தாலும், இறைவன் திரும்பத் திரும்ப முனிவர்களைப் பிறவி செய்து மறுபடியும் வேதங்களை உலகங்களுக்குக் கொண்டு வருகிறார். வேத சாஸ்திரங்களுக்கு முதலோ முடிவோ கிடையாது என்பதை நாம் முக்கியமாகப் புரிந்து கொள்ள

வேண்டும். இவை ஆகாஷத்தில் என்றும் நிரந்தரமாக இருப்பவை. இதனால் தான் எந்த வேத சாஸ்திரங்களுக்கும் எழுதிய தேதி எதுவும் கிடையாது. 5,000 வருடங்களுக்கு முன்னால் கூறப்பட்ட பகவத் கீதையில் ஸ்ரீ கிருஷ்ணர், “நான் இதே கீதையை கோடிக்கணக்கான வருடங்களுக்கு முன்னால் விவஸ்வன் என்ற சூரிய தேவனுக்கு முன்பு கூறியிருக்கிறேன்" என்று கூறுகிறார்.

மஹா விஷ்ணு எண்ணற்ற பிரம்மாண்டங்களைத் தன் ரோமக் கோளங்களிலிருந்து உண்டு பண்ணுகிறார். இப்படி உண்டான நமது பிரம்மாண்டத்தில் இருக்கும் 14 உலகங்களுக்கும் அதன் நிலையைப் (Planery Level) பொறுத்து தனித்தனியாக வேதங்கள் உள்ளன. 14 ஆவது உலகமான பிரம்ம லோகத்தில், நம் பூலோகத்தில் உள்ளதை விடவும் ஆயிரம் மடங்கு சாஸ்திரங்கள் அதிகமாக உள்ளன.

வேதத்தைச் சேராத மதங்களின் (Non-Vedic Religions) குறிக்கோள் வித்தியாசமானது. அவை கீழ் நிலையில் இருக்கும் மனிதனை படிப்படியாக மேலே கொண்டு செல்வதற்காக உண்டு பண்ணப் பட்டவை. எனவே அவற்றில் மறு பிறவி, விக்ரஹ வழிபாடு, வைகுந்தம், கோலோகம் இப்படி எதுவும் இருக்காது. அவர்களுக்கு சொர்க்கத்துக்குப் போய் உல்லாசமாக இருக்க வேண்டும் என்பது மட்டும் தான் குறிக்கோளாக இருக்கும். இவர்கள் மாமிசம், மது கூட சாப்பிடுவார்கள். அவர்களுக்கு அளவற்ற சமுத்திரமான ஆன்மீக உலகங்களின் உண்மைகளைப் பற்றி அதிகம் தெரிவதில்லை.

வேதங்களைப் போல், வேத மதங்களுக்கும் ஆதியும் இல்லை, அந்தமும் இல்லை. அதனால் தான் அதற்கு சனாதன தர்மம் என்று பெயர். மாறாக மற்ற மதங்களுக்கு ஆதியும் உண்டு எனவே அந்தமும் உண்டு. இதை நாம் சரித்திரத்திலேயே காண்கிறோம். எந்த ஒரு பொருளுக்கு ஆரம்பம் உண்டோ அதற்குக் கண்டிப்பாக முடிவும் உண்டு.

## *6.4.* விக்கிரக வழிபாட்டின் உண்மைகள்

விக்கிரக வழிபாட்டைப் பொறுத்தவரை வேதங்களைச் சார்ந்த சனாதன தர்மத்தைத் தவிர வேறு எந்த மதமும் இதை அனுமதிக்க வில்லை. விக்கிரக வழிபாட்டைப் பற்றி நாம் பேசும் போது அவர்கள் நம்மை 'ஓ நீங்கள் பொம்மையை வணங்குபவர்களா?' என்று ஏளனம் செய்கிறார்கள். உண்மையில் அவர்கள் ஆன்மீக அறிவில்லாமல் இப்படிப் பேசுகிறார்கள். இவ்வாறு பேசும் மதங்களில் கூட மறைமுகமாக விக்கிரகத்தையே வணங்குகிறார்கள். கிறிஸ்தவர்கள் சிலுவையை வைத்து வணங்குகிறார்கள். முகமதியர்கள் மெக்காவையும் அங்கே கப்பாவில் இருக்கும் ஹஜர்-அல்-அஸ்வத் என்ற இரு கறுப்பு கற்களையும், மக்கம்-இப்ரஹிம் என்ற புனித தூதுவர் இப்ரஹிமின் இரு பாதப் படிவத்தையும் வணங்குகிறார்கள். அந்த இரு புனித கற்களும் கீறிய சிவலிங்கமே என்று பலர் சொல்லுகிறார்கள். அவர்கள் முன்பு சந்திரக் கடவுளை (சிவ பெருமான் சந்திரனை அணிந்துள்ளார்) வழிபட்டதாகக் ஆராய்ச்சியாளர்களும் கூறுகிறார்கள். யூதர்கள் புனித சுவரை வணங்கும் பொருளாகக் கொண்டுள்ளனர். மேலும் பல மதங்களுக்கு 'பணமே' அவர்களின் வழிபடும் விக்கிரகம்!

ஒரு ஆலயத்தில் முறையாக பிரதிஷ்டை செய்த விக்கிரகம், ஒரு தபால் பெட்டியைப் போன்றது. அது வெறும் கல் சிலை அல்ல. நாம் கடிதத்தை ஒரு தபால் பெட்டியில் போட்டால் மட்டுமே அது வேண்டிய இடத்தை அடையும். வேறு எங்கு போட்டாலும் அது செல்வதில்லை. பிரதிஷ்டை செய்த விக்கிரகம் ஒரு தபால் பெட்டியைப் போன்றது. நாம் அந்த விக்ரஹத்துக்குச் செய்யும் அனைத்து சேவைகளும் இறைவனுக்கே நேரில் போய்ச் சேருகிறது.

ஸ்ரீகிருஷ்ணரை வீட்டில் விக்கிரகமாக வழிபடுவது மிகவும் சிறந்தது. பெரும்பாலான புதிய மதங்களில் விக்கிரக வழிபாடு கூடாது என்றே கூறப்பட்டுள்ளது. வேதம்

சாராத மதங்களுக்கு (Non-Vedic religions) விக்கிரக வழி பாடு விதிக்கப் படவில்லை.

## *6.5.* ஏமாற்று மதங்கள்

சுமார் 40 வருடங்களுக்கு முன்னால், பரம இறைவன் யார், பரம உண்மை என்ன என்பதை அறிவதற்காக ஒவ்வொரு மதங்களுக்கும் நான் சென்று கொண்டிருந்தேன். அப்போது நான் கேட்ட பல விஷயங்கள் என்னைக் குழப்பத்தில் ஆழ்த்தின.

1) உலகம் தட்டையானது
2) விலங்குகளுக்கு ஆத்மா கிடையாது (பைபிளின் படி, பெண்களுக்கும் கூட ஆத்மா 1955 வரையிலும் இல்லை!)
3) உயிர் இல்லாததால் விலங்குகளைக் கொல்லலாம்.
4) இறைவன் பொறாமை உள்ளவர்
5) மறு பிறப்பு கிடையாது
6) இறைவனிடம் எப்போதும் நாம் பயத்துடன் இருக்க வேண்டும்
7) அதிக பாவம் செய்தவர்களுக்கு நிரந்தர நரகம்
8) சாத்தானுக்கு இறைவனுடைய அளவு பலம் உண்டு
9) விக்கிரகம் மூலம் இறைவனை வணங்கக் கூடாது

இப்படி நிறைய கேள்விப்பட்டேன். ஆனால் இவையெல்லாம் எந்த அளவுக்கு உண்மை என்பதை ஒருவன் முழு மனதோடு ஆராய்ந்து பார்த்தால் மட்டுமே புரியும். உலகம் தட்டையானது அல்ல என்று வாதித்த கலிலியோ என்ற இத்தாலிய நாட்டு விஞ்ஞானிக்கு விஷம் கொடுத்து அன்றைய வாட்டிக கிறிஸ்தவர்கள் கொன்றனர் என்று படிக்கிறோம்.

ஸ்ரீமத் பாகவதத்தில், இப்படி சுய நலம் கொண்ட ஏராளமான ஏமாற்று மதங்கள் உண்டு என்றும், அவை அனைத்தையும் தூர எறிந்து விட்டு மதமற்ற ஜீவ தர்மத்தை மட்டுமே பின்பற்ற வேண்டும் என்று கூறுகிறது:

தர்மஹ் ப்ரோஜித கைதவோ அத்ர பரமோ
... (ஸ்ரீமத் பாகவதம் 1.1.2)

"ஏமாற்றுகின்ற அத்தனை மதங்களையும் தூர எறிந்து விட்டு, ஸ்ரீமத் பாகவதத்தில் கூறும் பரம ஜீவ தர்மத்தை மட்டுமே கடைப்பிடிக்க வேண்டும்..."

இதையே தான் பகவான் ஸ்ரீ கிருஷ்ணரும் கீதையில் (18.66), 'அத்தனை மதங்களையும் எறிந்து விட்டு என்னிடம் மட்டும் சரணடை' என்று கூறுகிறார்.

உண்மையில் ஒவ்வொரு மதமும் மனிதனை படிப்படியாக மேலே கொண்டு செல்வதற்காகவே உண்டானவை. அவை நாம் பள்ளிக்கூடத்தில் காணும் வித்தியாசமான வகுப்புக்களைப் போன்றதாகும். ஒவ்வொரு ஜீவனும் படிப்படியாகத்தான் மேலே செல்ல முடியும். ஜீவன்கள் நாஸ்திகத்திலிருந்து ஆரம்பித்து பிரேம பக்தி வரைக்கும் செல்லுவார்கள்.

நாஸ்திகர்களை இரண்டு கால் மிருகங்கள் என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. ஏனென்றால் அவர்களது முந்திய பிறவி ஏதாவது மிருகமாகத்தான் இருக்கும். ஆனால் இறந்த மூதாதையர்களையும், வாதை, பேய் பிசாசுகளையும் வழிபடுபவர்கள் இதற்கு அடுத்த நிலையில் உள்ளவர்கள். தேவர்களை வழிபடுபவர்கள் அதை விடவும் மேலானவர்கள். ஆனால் பரம இறைவனை வழிபடுபவர்களோ அனைவரை விடவும் மேலானவர்கள்.

# 7. சுத்த உணவின் முக்கியத்துவம்

## *7.1.* நீ சாப்பிடுவதே நீ

ஒருவனின் சுபாவத்தை நாம் அவன் உண்ணும் உணவிலிருந்தே மிகவும் எளிதாகக் கணித்து விடலாம். நாம் உண்ணும் உணவே நாம். "You are what you eat" என்பது பொன் மொழி. நாம் உண்ணும் உணவிலுள்ள ஸ்தூல பாகம் நம் உடலையும் சூட்சும பாகம் நம் மனத்தையும் வளர்க்கின்றன. மீதியுள்ள மல (சக்கை) பாகம் வெளியே செல்கிறது.

மாமிசம், மீன், முட்டை, மது போன்ற அசுத்த உணவுகளை உண்டால் அசுத்த உடலும் அசுத்த மனமுமே உண்டாகும். சாத்வீக உணவை சாப்பிட்டால் மட்டுமே சுத்தமான உடலும் சுத்தமான மனமும் உண்டாகும். சுத்தமான மனத்தில் மட்டுமே இறைபக்தி உண்டாகும்.

*ஆஹார சுத்தௌ சத்வ சுத்தி*
சத்வ சுத்தௌ த்ருவ ஸ்மிருதி
ஸ்மிருது லம்பே சர்வ கிரந்தி
நாம் விப்ர மோக்ஷஹ (சண்டோக்ய உப 7.26.2)

“சாத்வீக உணவை ஒருவன் புசித்தால் அவனது மனம் தூய்மையடைகிறது. தூய்மையான மனம் இயற்கையாகவே எப்போதும் ஆண்டவனை நாடுகிறது. அதனால் உயர்ந்த குறிக்கோளான மோட்சத்தை அது கொடுக்கிறது.”

இந்த உலகத்தில் நிறைய மதங்கள் மாமிசம், மீன் முட்டை, மது சாப்பிடுவதை ஆதரிக்கின்றன. அவர்களது வழிபாட்டிலும் கோயில்களிலும் கூட வெட்கமின்றி இந்த அசுத்த உணவுகளைச் சாப்பிடுகின்றனர். அவைகள்

அசுத்தமான மதங்கள். இந்தக் கலி காலத்தில் இப்படிப்பட்ட மதங்களே பிரபலமாகும் என்று ஸ்ரீ மத் பாகவதத்தில் அழகாக எழுதப்பட்டுள்ளது.

கிருஷ்ண பக்தி மார்க்கத்தில் ஒருவன் வந்தால், அவன் சீக்கிரமே பூண்டு வெங்காயத்தைச் சாப்பிடுவதை விட்டு விடுவான். கேவலம், நாம் ஒரு அஷ்டாங்க யோக வகுப்பில் சேர்ந்தாலே போதும். அவர்கள் நம்மை பூண்டு வெங்காயத்தைச் சாப்பிடக்கூடாது என்று பெரிய கட்டளையையே போட்டு விடுவார்கள். ஆனால் பெரும்பான்மையானவர்களுக்கு அதன் காரணம் தெரியாது.

உணவை மூன்று விதங்களாகப் பிரிக்கலாம்: சத்வ உணவு, ராஜஸ உணவு, தாமஸ உணவு என்று. இதைப்பற்றி பகவத் கீதையில் வரும் சுலோகங்களைக் காணலாம்.

ஆயுஹ் சத்வ பலாரோக்ய
சுக ப்ரிதி விவர்தனா:
ரஸ்யா: ஸ்னிக்தா: ஸ்திரா ஹ்ருதயா
ஆஹாரா சாத்விக ப்ரியா: .. (கீதை 17.8)

“சாத்விக உணவு ஒருவனுக்கு ஆரோக்கியத்தையும் நீண்ட ஆயுளையும், சுத்தமான மனதையும் வாழ்க்கையையும், வலிமையையும், மகிழ்ச்சியையும் கொடுக்கும். அவை இனிப்பாகவும் ரசமுள்ளதாகவும், எளிதில் சாப்பிடக் கூடியதாகவும் இருக்கும்."

கத் அம்ல லவனாதி உஷ்ண
திக் ஷ்ண ருக் ஷ விதாவிஹின:
ஆஹாரா ராஜ சஸ்யேஷ்டா
துக்க சோகா மய ப்ரதா: .. (கீதை 17.9)

“மிகக் கசப்பாகவும், மிக புளிப்பாகவும், உப்பாகவும், கடும் காரமாகவும் (pungent), உலர்ந்தும், எரிப்பாகவும் உள்ள

உணவு ராஜஸ குணம் உள்ளவர்களுக்குப் பிடிக்கும்.

யாத யாமம் கத ரஸம்
புதி பர்யுஷிதம் யத்
உச்சிஷ்தம் அபி சாமேத்யம்
போஜனம் தாமஸ ப்ரியம் .. (கீதை 17.10)

"மூன்று மணி நேரத்துக்கு முன்பு சமைத்த உணவு, சுவையில்லாத உணவு, கெட்டுப்போன உணவு, ஊசிப்போன உணவு, இப்படி அசுத்தமான உணவு வகைகள் தாமஸ குணம் உள்ளவர்களுக்குப் பிடிக்கும்,"

மாமிசம், மீன், முட்டை அனைத்தும் அசுத்தமான பொருட்கள். அவை உணவே அல்ல. இதில் பூண்டும் வெங்காயமும் சத்வ உணவில் வராது. மேலும் இவை பாக்டீரியாக்களை இழுத்து தன் மேல் வைத்துக் கொள்ளும். சிறு நேரத்திலேயே அது அசுத்தமான உணவாக ஆகிவிடும். இதைச் சாப்பிட்டால் மந்த புத்தியும் சோம்பேறித்தனமும் வரும். மூளை மந்தமாவதை ECG யில் காணலாம்.

## *7.2.* பூண்டு வெங்காயம் தாமச உணவுகள்

அது மட்டுமின்றி, வெங்காயம், பூண்டு, காளான் போன்ற தாமஸ உணவுகளைக் கண்டிப்பாக அகற்ற வேண்டும். ஏன் வெங்காயம், பூண்டு இவற்றைக் கூட சாப்பிடக்கூடாது என்று ஒருவன் கேட்கலாம். நிறையக் காரணங்கள் உள்ளன. இந்த உணவுகளில் உள்ள Sulphone Hydoxyl என்ற ரசாயன மருந்துப் பொருள் ஒருவனின் மூளையில் உள்ள மென்மையான செல்களையும் தாண்டி மூளைக்குள் சென்று நம்மை மந்தமாக்கி விடுகிறது. இது கிருஷ்ண பக்திக்கு மிகவும் ஆபத்தானது.


மேலும் சுமார் 1955-யில் முதன் முதலாக விமானங்களை பயணிகளைக் கொண்டு செல்வதற்காக உபயோகப்படுத்திய போது, விமானம் ஓட்டுபவர்களுக்கு

விதித்த ஒரு சட்டம் என்னவென்றால், அவர்கள் 72 மணி நேரத்துக்குள் பூண்டோ வெங்காயமோ சாப்பிட்டிருக்கக் கூடாது. சுவாசப் பரிசோதனை செய்த பின்னரே எந்த விமானியினாலும் விமானம் ஓட்ட முடிந்தது. ஆனால் இப்போது கம்ப்யூட்டர் இருப்பதால் இந்த விதி விலக்கு இல்லை.

இதைத்தவிர பூண்டு வெங்காயத்தில் ஒரு ஆபத்தான Sulphone Hydroxyl என்ற விஷப் பொருள் உள்ளது. அது மிகவும் மென்மையான மூளையின் சுவரையும் தாண்டி உள் சென்று மூளையை மந்தமாக ஆக்குகிறது. இந்த பெரிய உண்மையை இப்போது விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ளனர். ECG யைக் கண்டு பிடித்த மேற்கத்திய விஞ்ஞானியான Dr. பெக் இதைப்பற்றி பெரும் ஆராய்ச்சி செய்து பூண்டும் வெங்காயமும் உண்மையில் நஞ்சுப் பொருட்கள் என்றும் அவை மன ஆரோக்கியத்தின் எதிரி என்றும், உடலை துர்வாசனைப் படுத்தும் பொருட்கள் என்றும், இவற்றை மருந்துக்குக் கூட உபயோகப்படுத்தக் கூடாது என்றும் கூறுகிறார்.

## 7.3. கொல்லாமை

சில மதங்கள் விலங்குகளுக்கு உயிரில்லை என்று கூறுகின்றன. அதனால் அவற்றை உணவுக்காகக் கொல்லலாம் என்று வாதிடுகின்றனர். பைபிளில் கூட 1955 ஆம் வருடம் அதைத் திருத்தி எழுதும் வரை பெண்களுக்கு உயிர் (soul) இல்லை என்றே இருந்தது. இது நிச்சயமாக ஆண்டவன் கொடுத்த வார்த்தைகள் அல்ல. ஜீவ தர்மத்தின் படி, வாழும் ஒவ்வொரு ஜீவனுக்கும் உயிர் உண்டு. ஆனால் அவைகளின் விழிப்பு நிலையில் வித்தியாசம் உண்டு. ஏனென்றால் அவைகளின் நரம்பு மண்டல வளர்ச்சியில் வித்தியாசம் இருக்கிறது. ஒரு உயிரை நாம் கொல்லும் போது அவைகளுக்கு எவ்வளவு வேதனை இருக்கும் என்பது அதன் உடம்பின் நரம்பு மண்டல வளர்ச்சியைப் பொறுத்தது.







தாவரங்களுக்கு நரம்பு மண்டலம் கிடையாது. எனவே அவற்றை உண்டால் பாவமில்லை. மாமிசம் உண்ணும் பலரும் அவர்கள் புத்திசாலியென்று எண்ணி சைவ உணவு சாப்பிடுவர்களும் கூட தாவர உயிரைக் கொல்கிறார்கள் என்று வாதிப்பார்கள். ஆனால் இப்போது உண்மை புரிந்திருக்கும். தாவர உணவு தான் பாவம் அற்றது. ஏனென்றால் அதற்கு நரம்பு மண்டலம் இல்லாததால் வேதனை கிடையாது. இருந்தாலும் பகவத் கீதையில் தாவர உணவைக் கூட அவருக்குப் படைத்த பின்னர் தான் சாப்பிட வேண்டும் என்று பகவான் ஸ்ரீகிருஷ்ணர் கூறுகிறார். ஏனென்றால் அதை அவர் பரிசுத்தமான பிரசாதமாக மாற்றிக் கொடுக்கிறார். பிரசாதத்தை நாம் சாப்பிடும்போது அது நமக்கு சுத்தமான ஆன்மீக மனத்தைக் கொடுக்கிறது.

தாவரங்களைப் போலன்றி, மனிதனின் நரம்பு மண்டலமோ மிகவும் முழுமையாக வளர்ந்தது. எனவே மனிதனைக் கொன்றால் மிகக் கடுமையான தண்டனையை வழங்குகிறார்கள். இதற்கு இடையில் இருக்கும் ஜீவராசிகளுக்கு வாய் பேசும் சக்தியில்லாதலால் அவற்றை மதங்களின் பெயரால் கொன்று சாப்பிட்டுத் தங்கள் வயிற்றைப் பிணக்குழியாக ஆக்கி உண்மையில் அவர்கள்

கர்ம விதியின் பிரகாரம் நரகமே செல்கிறார்கள்.

ஆண்டவனின் முன்னால் அனைத்து ஜீவராசிகளும் அவரது பிள்ளைகளே. இதுவே ஜீவ தர்மம். ஆனால் மனித ஜென்மம் எடுத்த ஜீவனுக்கு மட்டுமே பகுத்தறிவு வழங்கப்பட்டுள்ளது. ஒரு ஜீவன் மனித ஜென்மம் எடுத்து அதனால் மட்டுமே ஆண்டவனின் பாதங்களை அடைய வாய்ப்பு கொடுக்கப் பட்டுள்ளது. எனவே மனிதர்கள் மட்டுமே கர்ம வினைகளுக்கு கட்டுப்பட்டவர்களாக ஆகிறார்கள். இவர்கள் மற்ற ஜீவ ராசிகளைக் கொன்றால் அதனால் பாவ கர்ம வினைகளுக்கு உட்படுகிறார்கள். விலங்குகளுக்கு மட்டும் கர்ம வினைகள் கிடையாது. விலங்குகள் இன்னொரு விலங்கை உணவுக்காக கொல்லலாம். அது இயற்கை அல்லது மாயா தேவி வகுத்த நியதி. அதன் படி ஒரு விலங்கு இன்னொரு விலங்குக்கு உணவாகிறது. ஆனால் மனிதர்களுக்கு அந்த விதி செல்லாது.

## *7.4.* ஆன்மீக உணவு விதி முறைகள்

ஒருவன் வீட்டில் ஸ்ரீராதா கிருஷ்ண வழிபாடு செய்ய வேண்டுமானால், அவன் முதலாவதாக ஒரு குருவிடம் தீட்சை எடுத்திருக்க வேண்டும். தீட்சை இல்லாமல் ஸ்ரீராதா கிருஷ்ண வழிபாடு செய்ய முடியாது.

மற்றும் உணவு வகையில் மிகவும் சிரத்தை அவசியம். ஸ்ரீராதா கிருஷ்ண வழிபாட்டில், கண்டிப்பாக சாத்வீக உணவை மட்டுமே உபயோகிக்க வேண்டும். மாமிசம், மீன், முட்டை, மது அனைத்தும் பாவ உணவுகள். அவை கொடுமையான தாமஸிக உணவுகள். அவைகளுக்கு ஒருபோதும் இங்கே இடமில்லை.

# 8. மாயாவாதம் அபாயம்

## 8.1. மாயாவாதம் அசத் சாஸ்திரம்

பிரம்மம் மட்டுமே உண்மை என்றும், மாயையிலிருந்து தான் பகவானும் கூட தோன்றுகிறார் என்றும், இந்த உலகம் உண்மையில்லை என்றும் கூறுவது ஶ்ரீபாத் சங்கராச்சாரியார் போதித்த மாயா வாதம். ஆனால் பின்னர் வந்த அனைத்து வைஷ்ணவ சம்பிரதாய ஆச்சார்யார்களும் அவரது மாயாவாதத்தை அப சாஸ்திரம் என்று தர்க்கம் செய்து வென்றனர். ஆனால் இன்னமும் மாயா வாதம் உலகம் எங்கிலும் உள்ளது.

ஶ்ரீசைதன்ய மகாபிரபு, பௌத்த மத சூன்ய வாதத்தின் இன்னொரு உருவமான இந்த மாயா வாதத்தை ஒழித்து கிருஷ்ண பக்தியை ஜீவன்களுக்கு கொடுக்க வந்தவர். அவர் ஶ்ரீபாத் சங்கராச்சாரியார் எழுதிய விவேகசூடாமணி போன்ற மாய வாத நூல்களைப் படித்தால் அவனது பக்தியே அழிந்து போகும் என்று கூறினார். எனவே மாயாவாதம் மிகவும் அபாயமானது. கிருஷ்ணருக்கு பக்தியுடன் சேவகம் செய்வதற்கு விருப்பமில்லாதவர்களை பிரிப்பதற்காக பகவான் கிருஷ்ணரே சிவ பெருமானை ஶ்ரீபாத் சங்கராச்சாரியராக அவதரிக்க வைத்து அசத் சாஸ்த்திரத்தை போதிக்க வைத்ததாக நாம் ஶ்ரீசைதன்ய சரிதாம்ருதத்தில் படிக்கிறோம். இதையே நாம் சிவ புராணத்திலும், ஶ்ரீகிருஷ்ணர் சிவபெருமானிடம் உத்தரவிடுவதாக பார்க்கிறோம்:

> த்வாபரதௌ யுகே புத்வ கலய மனுஸதிஷு
> ஸ்வகமைஹ் கல்பிதைஸ் த்வம் ச
> ஜனன் மத்-விமுக்கன் குரு

"துவாபர யுகத்தின் பின் வரும் கலியுகத்தில் நீ தோன்றி, வேதங்களில் வரும் வார்த்தைகளுக்கு பொய்யான

(Imaginary) அர்த்தங்களைக் கொடுத்து, என் பக்தர்கள் அல்லாதவர்களை என்னிடமிருந்து பிரிக்க வேண்டும்"

மேலும் இதையே தான் நாம் பத்ம புராணத்தில் சிவபெருமான் பார்வதி தேவியிடம் கூறுவதாகவும் காண்கிறோம்:

மாயாவாதம் அசத் சாஸ்திரம்
பிரச்சன்னம் பௌத்தம் உச்சதே
மாயெய்வ கல்பிதம் தேவி கலௌ பிராமண ரூபினே

'நான் கிருஷ்ண பக்தியற்ற அசுர புத்தி உள்ளவர்களுக்கு மாயாவாதம் என்ற அசத் சாஸ்திரத்தைப் போதித்து, அவர்களைப் பிரிப்பேன்' - (பத்ம புராணம் 6.236.7)

எனவே, சிவ புராணம், பத்ம புராணம், சைதன்ய சரிதாம்ருதம் அனைத்தும் இந்த ஒரே உண்மையைத் தான் கூறுகிறது.

## *8.2.* பிரம்மத்தைப் பற்றியுள்ள உண்மை என்ன*?*

பிரம்மத்தைப் பற்றி பல உயர்ந்த சாஸ்திரங்களில் நாம் காணலாம். பிரம்மம் என்பது பகவான் ஸ்ரீகிருஷ்ணரின் ஆன்மீக அங்கத்திலிருந்து கிளம்பும் காந்தியே என்று படிக்கிறோம்.

பிரம்ம அங்க காந்தி தான்ர, நிர்விசேஷ பிரகாஸே
சூர்ய யேன சர்ம சக்ஸே, ஜியோதிர் மய பாஸே

"பகவான் ஸ்ரீகிருஷ்ணரின் ஆன்மீக தேகத்திலிருந்து கிளம்பி எங்கிலும் வியாபித்திருக்கும் வெளிச்சமே பிரம்மம். அதற்கு அப்பால் இருப்பவரே பகவான். சூரியனை பகவானுக்கும், அதிலிருந்து கிளம்பி எங்கிலும் வியாபித்திருக்கும் ஒளிக்கதிர்களை பிரம்மத்துக்கும் ஒப்பிடலாம்." - (சைதன்ய சரிதாம்ருதம் மத்ய 20.159)

மாயாவாதத்தின் படி, பிரம்மத்தைத் தவிர வேறு எதுவும் கிடையாது. இதன் படி, பகவானும் கூட மாயையின் சக்தியினால் பிரம்மதிலிருந்து வருகிறார். பிரம்மம் மட்டுமே உண்மையென்றால், பின் இந்த மாயை எங்கேயிருந்து வந்தது? உண்மையில், பகவானே உண்மை. பிரம்மம் அவரது ஆன்மீக அங்கத்திலிருந்து கிளம்பும் தேஜஸ். சூரிய ஒளிக்கதிரிலிருந்து சூரியன் தோன்றுவதில்லை.

இந்த ஜட உலகங்கள் எதுவும் உண்மையில்லை என்று மாயாவாதம் போதிக்கிறது. ஆனால் உண்மை என்னவென்றால், ஜட உலகங்கள் நிரந்தரமானவை அல்ல. அவை பொய்யல்ல.

மாயாவாதத்தின் படி, ஜீவன்களுக்கும் பகவானுக்கும் (பரமாத்மா) வித்தியாசமில்லை. ஆனால் உண்மையில் ஜீவன்கள் பரம இறைவன் அல்ல. ஜீவன்கள் ஸ்ரீகிருஷ்ணரின் தடஸ்த சக்தியென்றழைக்கப்படும் ஜீவ சக்தியிலிருந்து வந்தவை. எனவே ஜீவன்கள் சில குணங்களின் பகவானை ஒத்தும், சில குணங்களில் அவரிடமிருந்து வேறுபட்டும் இருக்கின்றன. பரம இறைவன் மிகப் பெரிய தீயென்றால், ஜீவன்கள் அதிலிருந்து கிளம்பும் சிறு தீப்பொறிகள் போன்றவை. இந்த பொறி, பகவானிடம் சார்ந்திருக்கும் போது முழு சக்தியுள்ளதாகவும், அவரைப் பிரிந்திருக்கும் போது சிறு சக்தியுடனும் இருக்கிறது.

ஜீவாத்மாவும் பரமாத்வாவும் ஒன்றல்ல என்பதை மத்வாச்சாரியார் மட்டுமின்றி எத்தனையோ மகான்கள் தெளிவாக கூறியிருக்கின்றனர். இருந்தாலும் கூட அசுர குணம் கொண்டவர்களை இழுக்கும் இந்த மாயாவாதம் இன்னமும் ஒழியவில்லை.

# *9.* கர்மம், ஞானம், அஷ்டாங்க யோகம்

## *9.1.* எந்த யோகம் சிறந்தது*?*

பகவத் கீதையை படிக்கும் போது, தர்மம், கர்ம யோகம், ஞான யோகம், அஷ்டாங்க யோகம், பக்தி யோகம் என்று பல யோகங்களைப் பற்றி அறிகிறோம். இவற்றைப் படித்தவர்கள், தங்கள் ஆன்மீக நிலைகளைப் பொறுத்து, கர்ம யோகமோ, அஷ்டாங்க யோகமோ, ஞான யோகமோ தான் சிறந்தது என்று கூறுவார்கள்.

ஆனால் பகவத் கீதையை ஒருவன் ஆழ்ந்து படிக்கும் போது, அவற்றின் ஒவ்வொரு அத்தியாயத்திலும், கடைசியில் பகவான் ஸ்ரீகிருஷ்ணர் பக்தி யோகத்தையே உயர்ந்ததாகக் கூறுகிறார். கர்ம யோகம், அஷ்டாங்க யோகம், ஞான யோகம் அனைத்தும் ஒருவன் பக்தி யோகத்துக்கு வருவதற்கு முன்னால் உள்ள படிக்கல்லே தான் என்றும், பக்தி இல்லாமல் எந்த விதமான மோட்சத்தையும் ஒருவன் அடைய முடியாது என்றும் உணர்கிறோம். கர்மிக்கள் சொர்க்கம் நரகத்துக்கும், ஞானிகள் பிரம்மத்தையும் அடைகின்றனர். இவை உத்தமமான இலக்கு அல்ல. பிரம்மம் ஸ்ரீகிருஷ்ணரின் அங்க காந்தியே என்று பாத்தோம். பக்தியினால் மட்டுமே பகவான் ஸ்ரீகிருஷ்ணரை கவரவோ அடையவோ முடியும்.

ஞான கர்ம யோக தர்ம நஹே க்ருஷ்ண வஸ
க்ருஷ்ண வஸ ஹேது ஏக ப்ரேம பக்தி ரஸ

“ஞான யோகம், கர்ம யோகம், அஷ்டாங்க யோகம், மற்றும் தர்மங்களை எல்லாம் ஒருவன் மிகச் செவ்வனே செய்தாலும், அவற்றால் ஸ்ரீகிருஷ்ணரை ஒரு போதும் கவர முடியாது. பிரேம பக்தி ஒன்றால் தான் அவரைக் கவர முடியும்.”
(- சைதன்ய சரிதாம்ருதம் ஆதி 17.75)

## *9.2.* அஷ்ட சித்தியால் ஏமாற்றப் படுதல்

ஆனால், அஷ்டாங்க யோகிகளின் நிலமை என்ன? இந்தக் கலியுலகத்தில், ஏராளமானவர்கள் எவ்வளவோ சிரமத்துடன் அஷ்டாங்க யோகம் செய்கின்றனர். யமா, நியமா, ஆசனா, பிராணாயாமா, பிரத்யஹாரா எல்லாம் தாண்டி பின்னர் அவர்கள் தாரணா என்ற நிலையை அடையும் போது அஷ்ட சித்தியை பெறுகிறார்கள். அதன் பின்னர் வருவது தியானமும் சமாதியும் ஆகும். அற்பமான அஷ்ட சக்தியை தாரணா என்ற நிலையில் உண்மையில் கொடுப்பது ஸ்ரீகிருஷ்ணரே.

## *9.3.* அஷ்டசித்தி நாய்க்கு போடும் எலும்புத் துண்டு போன்றது

ஒருவன் அஷ்டாங்க யோகத்தை ஏன் செய்கிறான்? அவனுக்கு வேண்டியது அஷ்ட சித்திகள். அவனுக்கு பகவான் ஸ்ரீகிருஷ்ணருக்கு அன்புடன் பக்தி சேவைகள் செய்வதில் விருப்பமில்லை. எனவே வேதங்களாலும் எந்த தேவர்களாலும் கூட அறிய முடியாத ஸ்ரீகிருஷ்ணர் அவனை ஏமாற்றுகிறார். எப்படி ஏமாற்றுகிறார்? உதாரணமாக ஒரு திருடன் நாயால் பாதுகாக்கப்படும் ஒரு வீட்டில் எப்படி இரவில் திருடுகிறான்? அந்த நாயிடம் ஒரு எலும்புத் துண்டைத் தூக்கி எறிகிறான். நாய்க்கு உண்மையில் உபயோகமற்ற அந்த எலும்புத் துண்டு கிடைத்ததும் அதைக் கடித்து ஆனந்தமாக ருசித்துக் கொண்டிருக்கும். அதன் வாயிலிருந்தே வரும் இரத்ததை, அந்த எலும்புத் துண்டிலிருந்து வருவதாக நினைக்கும். அந்த நேரம் திருடன் வீட்டின் உள்ளே சென்று விடுகிறான்.

## *9.4.* மாயையால் பொதிந்ததே அஷ்ட சக்திகள்

நாயின் எலும்புத் துண்டு போன்ற இந்த அஷ்ட சக்தி சாதாரணமானது அல்ல. அது பகவான் ஸ்ரீகிருஷ்ணரின் மாய

சக்தியினால், தானே கடவுள் என்றும், தனக்கு அந்த ஸ்ரீகிருஷ்ணரே அடக்கம் என்றும் கூட கூற வைக்கும். அவன் ஸ்ரீகிருஷ்ணரின் தோற்றத்தைக் கூட தன் உடலில் காட்டுவான். அது உண்மையில் பகவானின் சொரூபம் அல்ல. அவன் காண்பிப்பது மாய ரூபம். உண்மையில் இவனால் கோவர்த்தன மலையை அல்ல, ஒரு வீட்டைக் கூடத் தூக்க முடியாது. நாம் ஸ்ரீமத் பாகவதத்தில் மாய தனவான் எப்படி பகவானிடமே மாயையால் விளையாடினான் என்று படிக்கிறோம்.

## *9.5.* இவனது நிலை என்ன?

பாமர மக்கள் இவனைப் பார்த்து, இவனே இறைவன் என்று வழி படுவார்கள். அதுவே அவன் வேண்டுவது. அஷ்ட சக்திகளினால் பெரும் பெயரும் புகழும் எடுப்பான். மாமிசம் கூட அவன் சாப்பிடுவான். ஆனால் அவனைப் பார்த்து யம தூதர்கள் அட்டகாசமாகச் சிரிப்பார்கள். கடைசியில், நரகத்திலோ, சாயுஜ்யம் என்ற பிரம்ம ஐக்கியத்திலோ விழுந்து தன்னையே கொல்வான். பாவம், அஷ்ட சக்திக்கு ஆசைப்பட்டு, பரமானந்த சாகரமான ஸ்ரீகிருஷ்ணரின் பாதங்களை அடையும் வாய்ப்பை முழுவதுமாக இழந்து விடுவான். இது அவனது மிகவும் பரிதாபமான நிலை.

## *9.6.* சித்தர்களை வணங்காதீர்கள்

சித்தர்கள் அஷ்டாங்க யோகிகளை விட ஒரு வகையில் உயர்ந்தவர்கள் ஆனாலும், இவர்களும் உண்மையில் பிரம்மத்தை தேடும் மாயாவாதிகளே. இவர்களால் கிருஷ்ண பக்தியை ஒரு போதும் கொடுக்க முடியாது.

> கிருஷ்ண பக்த - நிஸ்காம, அத ஏவ சாந்த
> புக்தி முக்தி சித்தி காமி சகலி அசாந்த

“ஜட உலக இன்பங்களை அனுபவிக்க ஆசைப்படுபவனும், முக்தி அடைய விரும்புபவனும், அஷ்ட சித்திகளை

நாடுபவனும் துரதிஷ்டசாலிகள். அவர்களால், கிருஷ்ண பக்தன் அடையும் இன்பத்தையும் சாந்தத்தையும் ஒரு போதும் அடைய முடியாது.” - (சைதன்ய சரிதாம்ருதம் மத்ய 19.149)

# 10. பஞ்ச உபாசனம்

மாயாவாதத்தைப் போதித்த ஸ்ரீபாத் சங்கராசாரியர், வேதங்களில் இல்லாத ஒரு வழிமுறையையும் ஏற்படுத்தினார். ஆனால் அவர் ஏற்படுத்திய பஞ்ச உபாசனம் என்ற இறைவனை ஐந்து விதங்களாக வழிபடும் முறையை நாம் எந்த வேத நூல்களிலும் காண முடியாது. இதன் படி, ஒருவன் சூரிய தேவன், விநாயகர், துர்கா தேவி, சிவ பெருமான், விஷ்ணு என்று ஐந்து விதங்களாக இறைவனை வழிபடலாம் என்பதே அது. இந்த பஞ்ச உபாசன முறையை நாம் அனைத்து இந்து வழிபாடுகளிலும் காணலாம்.



## *10.1.* பஞ்ச உபாசனத்தின் நோக்கம்

ஆனால் இதன் உண்மை வேறு. ஒரு ஜீவனின் ஆன்மீக வளர்ச்சியின் பாதையே இது. ஜீவன்கள்

படிப்படியாக ஆன்மீகத்தில் வளர்வதையே இது குறிக்கிறது. மேலும் இந்த உபாசன முறை, தர்மம், அர்த்தம், காமம், மோட்சம் என்ற புருஷார்த்தத்தை அடிப்படையாகக் கொண்டது. முதலாவதாக ஒரு ஜீவன், குறிப்பாக விஞ்ஞானிகள், இறைவனின் படைப்பை ஒரு சக்தியிலிருந்து வருவதாகக் காண்பான். அவன் அப்போது தெரிந்தோ தெரியாமலோ இயற்கையை வணங்குகிறான். இவ்வாறு அவன் சூரியதேவனை வணங்குகிறான்.

பின்னர் அவன் ஆன்மீகத்தில் இன்னமும் வளர்ச்சியடையும் போது, தன் செயல்கள் தடங்கல்கள் (விக்னங்கள்) இல்லாமல் இருக்க வேண்டும் என்பதற்காக சக்தியை (விநாயகரை) வணங்குவான். அதன் பின்னர் அவன் இந்த உலகத்தில் மனைவி, குழந்தைகள், செல்வங்கள் சேர்க்க, துர்கா தேவியை வணங்குகிறான். பின்னர் அவன், தனக்கு மேலும் புகழ், ஆனந்தம் வேண்டுமென்று சிவ பெருமானை வணங்குகிறன். ஆனால் பின்னர் இந்த உலகம் உண்மையில் துன்பங்கள் மட்டுமே நிறைந்தது என்று உணர்ந்து, மோட்சத்தை நாடுவான். அப்போது அவனுக்கு விஷ்ணுவிடம் பக்தி தோன்றுகிறது. அந்த பக்தியினால் மட்டுமே அவன் மோட்சத்தை அடைகிறான். எனவே இந்த உபாசன முறை, தர்மம், அர்த்தம், காமம், மோட்சம் என்ற புருஷார்த்தங்களையே அடிப்படையாகக் கொண்டவை. ஆனால் இவைகளால், ஸ்ரீகிருஷ்ணரை கவரவோ, அடையவோ முடியாது.

## *10.2.* பஞ்ச உபாசனம் கிருஷ்ண பக்தி அல்ல

இந்த பஞ்ச உபாசன முறை, பிரேம பக்தியை ஒரு போதும் கொடுக்க முடியாது. கிருஷ்ண பிரேம பக்தியின் முன் இந்த நான்கு புருஷார்த்தங்கள் அல்பமாகத் தெரியும்.

> பஞ்சம புருஷார்த்தா, பிரேமானந்தாம்ருத சிந்து,
> மோட்சாதி ஆனந்த யார, நகே ஏக பிந்து

“பிரேம பக்தியில் திளைக்கும் ஒரு கிருஷ்ண பக்தனின் ஆனந்தம், மகா சமுத்திரத்தைப் போன்றது. ஆனால் பஞ்சம உபாசனம் செய்து தர்மம், அர்த்தம், காமம், மோட்சம் இவைகளிலிருந்து கிடைக்கும் இன்பமோ, அந்த சமுத்திரத்தின் ஒரு சிறு துளி தண்ணீருக்கும் கூட நிகரற்றது.” - (சைதன்ய சரிதாம்ருதம் ஆதி 7.85)

ஐந்து விதமான மோட்சங்களில், பிரம்மத்தில் ஐக்கியமாகும் சாயுஜ்ய முக்தியை ஒரு கிருஷ்ண பக்தன் அறவே வெறுப்பான். கோமா போன்ற ஒரு நிலையைக் கொடுக்கும் அந்த பிரம்ம மோட்சத்தை ஆன்மீகத் தற்கொலை என்று கூறலாம். இப்போது நீங்கள் எண்ணிப்பாருங்கள். உங்களுக்கு பிரம்ம மோட்சத்தால் கிடைக்கும் தூசி போன்ற அந்த சிறு ஆனந்தம் வேண்டுமா, அல்லது பிரேம பக்தியின் மூலம் கிடைக்கும் அளவற்ற சாகரம் போன்ற பிரேம பரமானந்தம் வேண்டுமா?


## *10.3.* தற்போதைய விநாயக வழிபாட்டைப் பற்றி

தற்போது எங்கிலும் இந்துக்களின் மத்தியில், விநாயக வழிபாடு ஏராளமாக நடக்கிறது. இந்த வழிபாடு, 16-ஆம் நூற்றாண்டில் தோன்றிய முத்கல ரிஷி என்ற ஒருவரால் பிரசித்தம் ஆக்கப் பட்டது.

கணங்களுக்குத் தலைவரான கணபதி என்று அழைக்கப்படும் இந்த தேவர், தடங்கல்களை நீக்குபவர். ஆனால் இவர் சுதந்திரமானவர் அல்ல. கணேஷர் ஸ்ரீகிருஷ்ணரின் பாதங்களில் தன் தலைகளை தாழ்த்தி, வேண்டிய சக்தியைப் பெறுகிறார் என்று பிரம்ம தேவர் எழுதிய பிரம்ம சம்கிதத்தில் மிகத் தெளிவாக வருகிறது.

யத் பாத பல்லவ யுகம் வினிதாய கும்ப
த்வந்த்வே ப்ரணாம ஸமயே ஸ கணாதி ராஜஹ்*:*
விக்னான் விஹந்தும் அலம் அஸ்ய ஜகத் த்ரயஸ்ய
கோவிந்தம் ஆதி புருஷம் தம் அஹம் பஜாமி

“விக்னங்களை நீக்குவதற்காக வேண்டிய சக்தியைப் பெறுவதற்காக, கணேஷர், தந்தங்கள் உள்ள தன் தலையை தாழ்த்தி, ஸ்ரீகிருஷ்ணரின் பாதங்களில் வைத்து வணங்குகிறார். அப்படிப்பட்ட கோவிந்தன் என்று அழைக்கப்படும் ஸ்ரீகிருஷ்ணரை நான் வணங்குகிறேன்.” - (பிரம்ம சம்கிதம் 5.50)




எனவே இந்த கணேஷர், ஆன்மீக மற்றும் நற்காரியங்களின் தடங்கல்களை நீக்கி உதவி புரிபவர். எனவே ஸ்ரீல ஜீவ கோஸ்வாமி என்ற நம் ஆச்சாரியாரும் கூட, ஒருவன் கிருஷ்ண பக்திக்கு வருவதற்கு தடங்கல்கள் இருந்தால், விநாயகரிடம் உதவி கேட்கலாம் என்றும், அவர் ஒரு வைஷ்ணவர் என்றும் கூறுகிறார். ஆனால் ஒருவன் கிருஷ்ண பக்தி மார்க்கத்தில் வந்த பின்னர் எந்த தேவர்களையும் வணங்கத் தேவையில்லை. கிருஷ்ண பக்தி அனோன்ய பக்தி. எனவே ஸ்ரீல பிரபுபாதர் விநாயக வழிபாடு தேவையற்றது என்று கூறியிருக்கிறார். பகவானின் அங்கத்தில் இருந்தாலும், தேவர்கள் பகவான் அல்ல. அவர்கள் ஜீவ தத்துவத்தைச் சேர்ந்தவர்களே.

கிருஷ்ண பக்தர்கள் தங்கள் தடங்கல்கள் தீர விநாயகரை வணங்கத் தேவையில்லை. பதிலாக

ஸ்ரீகிருஷ்ணரின் நேரடியான அவதாரமான '*சர்வ விக்ன வினாஸ காரி'* என்றழைக்கப்படும் ஸ்ரீநரசிம்ம தேவரை வணங்கலாம்.

*நமஸ்தே நரஸிம்ஹாய, ப்ரஹ்லாத லாத தாயீனே*
*ஹிரண்ய கஸிப்பூர் வஹ்ஷஹ, ஸிலா டங்க நகாலயே*

*இதோ நரஸிம்ஹோ பரதோ நரஸிம்ஹோ*
*யதோ யதோ யாமித தோ நரஸிம்ஹோ*

*பஹீர் நரஸிம்ஹோ ஹ்ருதயே நரஸிம்ஹோ*
*நரஸிம்ஹம் ஆதிம் ஸரணம் ப்ரபத்யே*

*தவ கர கமல வரே நகம் அட்புத ஸ்ரிங்கம்*
*தலித ஹிரண்ய கஸிப்பூ தனு ப்ருங்கம்*

*கேசவ த்ருத நரஹரி ரூப ஜய ஜகதீச ஹரே*
*ஜய ஜகதீச ஹரே, ஜய ஜகதீச ஹரே*

*ஜய நரஸிம்ஹ தேவ், ஜய நரஸிம்ஹ தேவ்*
*ஜய பக்த ப்ரஹலாத், ஜய பக்த ப்ரஹலாத்*

# *11.* ஜீவ தர்மம் மதமற்றது

உண்மையில் அனைத்து மதங்களும், ஜீவனின் உண்மையான தர்மத்தை படிப்படியாக உணர வைப்பதற்காக உண்டு பண்ணப்பட்டவையே. நாம் மதங்களுக்கெல்லாம் அப்பாற்பட்டவர்கள். மதத்திற்காக நாம் படைக்கப்படவில்லை. அவை பள்ளிக் கூடத்தின் வித்தியாசமான வகுப்புகளே. நாம் இந்துக்களோ, கிறிஸ்தவர்களோ, முகமதியர்களோ அல்ல. ஜீவனுக்கு எந்த மதமும் கிடையாது.

## *11.1.* ஜீவ தர்மம் எல்லா மதங்களுக்கும் அப்பால்

ஜீவ தர்மம் மதமற்றது. பள்ளிக்கூடங்கள் போன்ற இந்த மதங்களின் மூலம் படிப்படியாக முன்னேறி, பட்டம் பெற்ற பின்னர் நாம் அந்த பள்ளிக் கூடத்துக்கு திரும்பவும் செல்வதில்லை. நாம் நம் ஜீவ தர்மம் என்ன என்பதை உணர்ந்த பின்னர், இந்த மதங்கள் தேவையில்லை. இதைத்தான் ஸ்ரீ கிருஷ்ண பகவான் கடைசியாக கீதையில் கூறுகிறார்:

ஸர்வ தர்மான் பரித்யஜ்ய
மாம் ஏகம் சரணம் வ்ரஜ
அஹம் த்வாம் சர்வ பாபேப்யோ
மோக்ஷ யிஷ்யாமி மா சுச: ... (பகவத் கீதை 18.66)

“நீ மற்ற எல்லா மத, தர்மங்களையும் எறிந்து விட்டு என்னிடம் முழுமையாக சரணடை. நான் அனைத்துப் பாவங்களில் இருந்தும் உன்னை விடுபட வைக்கிறேன். நீ கவலைப் படாதே!”

ஆனால் நாம் எப்போது எல்லா மதங்களையும் தூர எறிந்து விட்டு, நம் ஜீவ தர்மத்தை உணர முடியும்? அதற்கு தகுதி வாய்ந்த ஒரு குருவிடம் சரணடைய வேண்டும். அவர் நம் ஜீவனின் உண்மையான தர்மம் என்ன என்பதை உணர வைப்பார்.

## *11.2.* நம் ஜீவ தர்மம் என்ன*?*

நம் உண்மையான ஜீவ தர்மம் என்ன? இதை அழகாக சாஸ்த்திரங்களில் நாம் காணலாம்.

ஜீவேர ஸ்வரூப ஹயா
கிருஷ்ணேர நித்ய தாஸா
கிருஷ்ணேர தடஸ்த சக்தி
பேத அபேத ப்ரகாஸா
... (சைதன்ய சரிதாம்ருதம் ஆதி 20.108)

"ஒவ்வொரு ஜீவாத்மாவின் நிஜமான இயற்கை அவன் ஸ்ரீ கிருஷ்ணரின் நித்தியமான சேவகனே. அனைத்து ஜீவாத்மாக்களும் ஸ்ரீ கிருஷ்ணரிடமிருந்தே தோன்றியவை. அவை சில விஷயங்களில் ஸ்ரீகிருஷ்ணரின் குணங்களை ஒத்தும், மற்ற விஷயங்களில் ஸ்ரீகிருஷ்ணரிடமிருந்து வித்தியாசமாகவும் உள்ளன."

## *11.3.* கிருஷ்ண பக்தியே ஜீவ தர்மம்

எனவே கிருஷ்ண பக்தியே ஜீவனின் உண்மையான தர்மம். அது ஒரு மதமல்ல. ஒவ்வொரு மதமும், கடைசியில் கிருஷ்ண பக்தியை ஒருவன் அடைவதற்காகவே உண்டு பண்ணப்பட்டவை. பகவத் கீதை, ஸ்ரீமத் பாகவதம் போன்ற அனைத்தும் எந்த மதத்தையும் சார்ந்ததல்ல.

## *11.4.* கிருஷ்ண பக்தனுக்கு யமன் கூட வணக்கம்

நாம் எத்தனையோ மதங்களைப் பற்றி அறிந்துள்ளோம். அவை நரகங்களைப் பற்றியும் யம ராஜனின் தீர்ப்பை (Judgement Day) பற்றியும் கூறுவதைக் கேட்டுள்ளோம். ஆனால், தகுந்த குருவிடம் தீட்சை பெற்று துளசி மாலை அணிந்த ஒரு கிருஷ்ண பிரேம பக்தன் யம ராஜனின் ஆட்சிக்கு உள்பட்டவன் அல்ல. மாறாக, அந்த யம ராஜன் மட்டுமல்ல, மற்ற தேவர்களும் கூட கிருஷ்ண பிரேம பக்தனை வணங்குவார்கள் என்று சாஸ்த்திரங்கள்

கூறுகின்றன. அவ்வளவு சிறந்தது கிருஷ்ண பிரேம பக்தி. கிருஷ்ண பக்தி ஒன்றே ஜீவனின் உண்மையான மகத்தான தர்மம். எனவே நாம் அனைத்து மதங்களையும் தாண்டி, அப்பால் ஜொலிக்கும் கிருஷ்ண பக்தி ஒன்றையே நாட வேண்டும்.

## *11.5.* அரிய வாழ்க்கையை வீணாக்காதீர்

ஜீவ தர்ம உண்மையை ஶ்ரீகிருஷ்ணரே சுமார் 500 வருடங்களுக்கு முன்பு ஶ்ரீ சைதன்ய மஹாபிரபுவாகத் தோன்றி நாம் எவ்வாறு கிருஷ்ண பக்தனாக இருக்க வேண்டும் என்பதை விளக்க அவதரித்தார். அவர் நமக்கு அளித்த மஹா உபதேசங்கள் அனைத்து சம்பிரதாயங்களையும் தாண்டி மேலானது.

நம்முடைய மனித பிறவி மிகவும் அரிதானது. 84 லட்சம் விதமான ஜீவ ராசிகளில், மானிடப் பிறவி மிக மிக அரிதானது. இந்த மானிடப் பிறவியில் மட்டுமே நாம் இறைவனை அடைய முடியும். இந்தப் பிறவியை நாம் வீணாக்கி விட்டோம் என்றால், மறு பிறவியில் நமக்கு எந்தப் பிறவி கிடைக்கும் என்று தெரியாது. இந்தப் பிறவியில் நாம் நாய் பூனை பன்றியைப் போல் வாழ்ந்தால், நாம் அடுத்த பிறவியில் அப்படியேப் பிறப்போம். ஆனால் இந்தப் பிறவியில் மிகவும் உன்னதமான ஶ்ரீராதா கிருஷ்ண வழிபாட்டில் ஈடுபட்டால், நாம் மிகவும் அதிர்ஷ்டசாலியாக ஆவோம். ஆனால் அது உங்கள் கையில் தான் உள்ளது.

ஶ்ரீல குரு தேவருக்கு ஜெய்!
ஶ்ரீல சுவாமி மஹராஜாவுக்கு ஜெய்!

நன்றி, வணக்கம்.